தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றல்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளி நாடு: மூன்றணு. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14

மலர் 1	சென்னை 5—2—1955 சனிக்கிழமை	இதழ் 32

சிந்தனைக்கு ஓர் இமயம்!

★

அறிஞர் அண்ணு!

வாய்நிறைய அழைக்கிருர்கள் ஆயிரமாயிரம் தம்பிமார்கள். சிந்தை குளிர்கிருர் அந்த செயல் வீரர். 'தம்பி' என்கிருர் ஆவலோடு ! உயிரெல்லாம்-உடம்பெல்லாம் மகிழ்ச்சிப்பெருக்கால் நனைகிரும். உயிர் உணர்ச்சி சுழல்கிறது ! இந்த 'பாசவுணர்வு' குடும்பப்பாசம் - நம்மையெல்லாம் ஓர் குடும்பமாக்கிற்று. அண்ணு! நினைத்தாலே போதும் நெஞ்சம் இனிக்கிறது!

நாடெங்கும் விழிப்புணர்ச்சி வீடெல்லாம் மொழிப்பற்று. பேச்சு மேடையா ? நாடகமா ? திரையுலகா ? கல்விக்கூடங்களா ? எழுத்துலகா ? எங்கே இல்லை அண்ணு ? தமிழ்சிரிக்கும் நெஞ்சங்களில்-தகமை மிகு சபைகளில் அண்ணு புன்னகை செய்கிருர்!
ஆயிரமாயிரம் இளைஞர்களின் இதயத்துடிப்பு !

திராவிடத்தின் பெருந்தலைவர்!

செத்துவிடுமோ என்றிருந்த வசனநடைக்கு புத்துயிர் அளித்த புரட்சியாளர் !

பெருங்கல்விப் பண்டிதர்களை வாயடைக்கச் செய்த நாவுக்கரசர்.

தமிழகத்தின் கலங்கரை ! அறிஞர்க்கெல்லாம் அறிஞர் ! பேரறிஞர் ! ஆற்றலறிஞர் ! சக்தி வாய்ந்த அரசியல் மேதை !

சமுதாயத்தின் கலங்கரை ! இவர் பேச்சிலே கருத்துப்புரட்சி ! மூச்சிலே விடுதலை கீதம் ஒலித்துக்கொண்டிருக்கும் ! எண்ணமெல்லாம் உயர்வானைத்தொட்டு விடும்.

இதோ! அந்தநடமாடும் பல்கலைக் கழகம்! அறிவுலகமேதை! அறிஞர் அண்ணு! எங்கள் அண்ணு! நம் அண்ணு! தமிழகத்தின் அண்ணு! திராவிடத்தின் அண்ணு !

தென்னகத்து ஷா !

★

எண்ணம்

கண்ணதாசன்

“தேசத்தைத் துண்டாட விடமாட்டோம்!” என்பதாக ஆவடியில் கூடிய காங்கிரசார் பலரும் முழங்கிய செய்தியை நண்பர்கள் அறிவார்கள். இந்தக் ‘காட்டுக் கூச்சல்’ கேட்டுக் கேட்டுச் சலித்துபோனதுதான் நமக்கு என்றாலும், எப்போதும் பண்டிதரும் இதே கூச்சலைப் போடுவதைப் பற்றி சிறிது சிந்தித்துத்தான் பார்க்கவேண்டியிருக்கிறது!

உலக நாடுகள் ஒவ்வொன்றும் வாழவேண்டிய முறைக்கு இலக்கணம் வகுக்கும் பண்டிதர், இனவாரி எண்ணம் பற்றிய வரலாறு எழுதிய பண்டிதர், இந்தநாடு இன்னாருக்குச் சொந்தம்; இதில் இன்னார் தலையிடக்கூடாது என்று நீதி வழங்க, வலியப்போகும் பண்டிதர், தான் சார்ந்த கண்டத்தில் மட்டும் இப்படித்தலை பிறழ்ந்து பேசுவானேன் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால்தான், உண்மையான நேரு எப்படிப்பட்டவர் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். சமுதாயத்தின் கண்களிலே, முதலாளித்துவ-ஆரிய ஏடுகளால் படம் பிடித்துக் காட்டப்படுகிற நேருதான் உண்மையான நேருவா? இல்லை! அவர், கற்பனை உலகின் அற்புத மனிதர்! அசல் நேரு வேறு; தன்னைச் சார்ந்தவர்கள் தென்னாட்டைச் சுரண்டித்தின்பதை, தன் “புனித வேஷம்” கொண்டு காக்க வேண்டும் என்று எண்ணமிடும் மூன்றாந்தர உள்ளம் படைத்தவர்தான் அசல் நேரு! ஆமாம், அசல் நேரு மனிதருள் மாணிக்கமல்ல; வெறும் கண்ணாடிக்கல்!

“ஒருவனை இன்னொருவன் சுரண்டக் கூடாது; சமுதாயம் சொத்துக்களை நிரவி வைத்து வாழவேண்டும்; சோசலிசமே மனித உலகின் வாழ்வை வளமாக்க வல்லது!” என்று தொண்டை கிழியப்பேசும் நேரு உண்மையான நேருதான் என்றால், தென்னாட்டை வடநாடும், வடநாட்டுத் தனிப்பட்ட முதலாளிகளும் சுரண்டுவதை ஒப்புக்கொண்டு, தென்னாட்டிற்கு சுரண்டலற்ற (குறைந்தபட்ச) வாழ்வையாவது தருவதாக பகிரங்கமாக அவர் அறிவிக்கவேண்டும்! காணோம்! இதுவரை, அந்த எண்ணம் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை; மாறாக, தெற்கு-வடக்குஒற்றுமை என்கிற உடைந்துபோன இராமபோன் பிளேட்டையே திருப்பித் திருப்பி வைக்கிறார்!

சௌகார்பேட்டையும் கோயங்கா கும்பலின் மௌண்ட்ரோட் ஆர்ப்பாட்டமும், வடநாட்டு, அதிகாரமில்லாத மனிதனுக்குக்கூட தென்னாடு அடிமைதான் என்கிற எண்ணத்தைத் திரும்பத் திரும்பக் கூறுகின்றன! இங்கிருந்துபோகிற (நூற்றுக்குத் தொண்ணூறு என்கிற ரீதியில் போகிற) வரியும், அடிமை, பேரரசனுக்குக் கப்பம் கட்டுவதைத்தான் வலியுறுத்துகின்றன. இதுபோல, திராவிட முன்னேற்றக் கழகம் அடிக்கடி எடுத்துக்காட்டிவரும், அரசியல் பொருளாதார அடிமைத்தனங்களை பண்டிதர் அறியாதவரா? அந்த அளவுக்கு அவர் மந்த புத்தி உடையவரா? அல்லது அறிந்தே மறைக்கிறார் என்றால், அத்தகைய வெறிபிடித்தவரை, மனிதருள் மாணிக்கமாகப் படம் பிடித்துக் காட்டுவதை என்னென்பது? அந்தப்படம்தான் அசல் நேரு என்று நம்புவது எவ்வளவு பெரிய மடத்தனம்!

“உலகத்துக்கு சமாதான உபதேசம் செய்யும் பண்டிதர், விளம்பரத்துக்கு வேஷம் போடும் வெத்து வேட்டுக்காரர்!” என்கிற முடிவுக்கு வருவதிலே என்ன தவறு இருக்க முடியும்!

“பார்மோசா செஞ்சினாவுக்குத்தான் சொந்தம்” என்று அறுதியிட்டுக்கூறும் சகல கலா வல்லவர்தான் அசல் நேரு என்றால், “தென்னாடு வடநாட்டுக்குத்தான் சொந்தம்” என்கிற ரீதியில் வரலாற்றைத் தலைகீழாய்த் திருப்பிப் பிடிக்கும் நேரு யார்? அதே ‘அசல்’ நேருதானா இவரும்! வரலாற்று அறிவுள்ளவர்கள் ஒப்புவார்களா?

உண்மை இதுதான்; இரட்டை மனிதர்; உலகத்தின் மற்றப்பகுதிகளில் அவர் நீதிமான். இந்திய உபகண்டத்தினுள் அவர் பேசும் சோஷலிசம், தனது ஏகாதிபத்தியத்தைப்பாதுகாத்துக்கொள்ளப் போடும் வேஷம்!

சுருக்கமாகச் சொன்னால், “தென்னாட்டைப் பிரிக்கக்கூடாது” என்று கூறும் நேருவும் யோக்கியமான நேருதான் என்றால், அவர் வரலாறுபடிக்காத பைத்தியக்காரர் என்பதையாவது அவரது பாதந்தாங்கிகள் ஒப்புக்கொள்ள வேண்டும். “இல்லை! அவர் வரலாற்று மேதைகூட” என்றால், சுயநலம் பிடித்த ஏகாதிபத்தியவாதிதான் அவர்” என்பதையாவது ஒப்புக்கொள்ள வேண்டும். “இரண்டும் இல்லை; யோக்கியர் & வரலாற்று நிபுணர்” என்று கூறுவதானால், அப்படிக் கூறுவோர், ஒன்று அயோக்கியர்களாக இருக்கவேண்டும்; அல்லது தற்குறிகளாக இருக்கவேண்டும்!

★

★ எண்ணித்துணிக ! ★

“முன்னாள் சமஸ்தானாதிபதிகளுக்கும் ஜமீன்தாரர்களுக்கும் சொந்தமான பல கட்டிடங்களும் மாளிகைகளும், உபயோகிக்கப்படாமல் பாழடைந்துள்ளன. அத்தகைய கட்டிடங்களைப் பாதுகாக்க அல்லது செப்பனிட அவர்களிடம் பொருள் இல்லையெனக் கருதுகிறேன்,”

“சமூக மாறுதல்கள் நடைபெறும்போதெல்லாம் இந்நிலைமை ஏற்படுகிறது: இங்கிலாந்தில் பெரிய பெரிய எஸ்டேட்டுகளெல்லாம் ஒரு காலத்தில் அவர்களுக்கு பெரிய சுமையாகிவிட்டன. அவைகளை, பொது இடங்களாகவும் ஆஸ்பத்திரிகளாகவும் மாற்றிவிட்டார்கள்: இந்தியாவிலும் இம்மாதிரி கட்டிடங்கள் ஏராளமாக உள்ளன. இவைகள் மெல்ல மெல்ல பாழடைந்து வருகின்றன.”

“இம்மாதிரி கட்டிடங்கள் எங்கெங்கு உள்ளதோ அவைகளில், கல்லூரிகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், நூலகங்கள், கூட்டுறவு சாலைகள், பொது மன்றங்கள் போன்றவைகளுக்குப் பயன் படுத்தலாம்.”

“கட்டிடங்களை உரியவரிடமிருந்து பலவந்தமாக வாங்கவேண்டியதில்லை. சிநேக முறையிலேயே வாங்கலாம். பெயருக்கு ஒரு விலை கொடுத்து வாங்கலாம். இதை உடனடியாக கவனிக்க வேண்டும்.”

★

‘தேவியவள் பால் சுரக்க திருஞானசம்பந்தன் பாடினான். காளியவள் கடாட்சத்தால் கம்பன் கவிஞனானான்’ இது பழைய ‘பசை’களில் ஒன்று. புத்தன்கூட போதிமரத்தடியில் தான் புதுக்கருத்தினைப் பெற்றான் என்பார்கள். எது எப்படியோ, விஷயம் இதுவல்ல; ஆனால் பண்டித நேருவின் மூளைமட்டும் சென்னைக்கு வந்து திரும்பும்போதெல்லாம் சுறுசுறுப்படைகிறது. பண்டித நேரு காமராசருக்கு எழுதியுள்ள இந்த கடிதம் அதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

நடைபாதையே கதி எனக் கிடப்போர்; இருண்டு புழுதிபடிந்து கிடக்கும் ஓட்டைக் குடிசைகளில் சுருண்டுகிடப்போர்; கையதுகொண்டு மெய்யது பொத்தி காலங்கடத்துவோர்; பிளாட்பாரங்களில் ‘ரிக்ஷா’வை நிறுத்திவிட்டு அதற்கு அடியிலேயே இல்லறம் நடத்தும் ஏழை ஜோடிகள் இங்கு ஏராளம்.

சென்னையிலே ஒரு சிங்கார மாளிகை, பெங்களூரிலே ஒன்று, நீலகிரியிலே மற்றொன்று, சொந்த ஊரிலே இரண்டொரு வீதிகளையே சொந்தமாகக் கொண்டோர்; அதாவது மிட்டா, மிராசு, சரிகை தலைப்பாகை, குட்டி ராசாக்கள்; இப்படி மற்றொரு பிரிவும் இங்கு இருக்கிறது.

கலங்கரையின் உச்சியிலே நின்று பார்ப்பவனுக்கு கீழே நடமாடும் மக்களின் ஏற்றத் தாழ்வுகளைத் தெரிந்துகொள்ள முடியாது; காரணம்; நிலை உயர்ந்திருக்கிறது: அதுபோல இன்றளவும் அகில உலகப் பிரச்சனைகளையே அலசிக்கொண்டிருந்த நேருவின் கவனம் கொஞ்சம் இறங்கி இருக்கிறது; ஏழை எளியவர்கள்மீதல்ல; நிலபிரபுக்கள், ஜமீன்தார்கள் போன்றவர்களின்மீது கண்ணோட்டம் விழுந்திருக்கிறது. பிரபுக்களின் நிலை கண்டு பரிதாபப்படுகிறார்.

ஆனால் நிலைமை என்ன—இந்த தொல்லைகளைக் கட்டிக்காப்பதைவிட, அப்படிக் கட்டிக்காப்பதில் கிடைக்கும் செல்வத்தைவிட பெருத்த அளவில் கிடைக்கும் சர்க்கார் தரும் நஷ்டஈடுகளைக் கொண்டு தொல்லையில்லாமல் கேளிக்கைகளில் மூழ்கிக் கிடக்கின்றனர்; அவர்கள் வாழ்ந்திருந்த பெரிய பெரிய மாளிகைகள் பாழ் அடைந்தாலும் வௌவால் திரிந்தாலும் கவலையில்லை என்ற நிலையில் இருக்கின்றனர். பண்டிதரின் கருத்து பாராட்டப்பட வேண்டியதுதான்: ஆகா! இவரன்றோ பண்டிதர்! எவ்வளவு முற்போக்கு எண்ணம் என்று! ‘ஆகா’ கூடப்போட்டுவிடலாம்: ஆனால் நிலப்பிரபுக்களின் மாளிகைகளை கட்டாயப்படுத்தி வாங்கக் கூடாது என்று கூறியுள்ளார்; இந்திய அரசியல் சட்டத்தில் சொத்துரிமைக்கு எல்லை நிர்ணயிக்காததால் ‘கனம்’ களிடமிருந்து சட்டாயமாக வாங்கவும் முடியாது. அதற்காக பணம் கொடுத்து வாங்கலாம் என்கிறார். அப்படிப் பணம் கொடுத்து வாங்கினால் பயன்படுமா? கட்டிடங்கள் என்பது ஒருபுறமிருக்க — அந்த பழைய கட்டிடங்களுக்கு கொடுத்து வாங்கும் பணத்தைக் கொண்டு புதிய கட்டிடமே எழுப்பிவிடலாம்: காரணம் ஜமீன் ஒழிப்பென்ற பெயரில் சில ஜமீன்தாரர்களின் சொத்துக்களைவிட அவர்களுக்குத் தரப்படும் நஷ்டஈடு அதிகமானது.

பண்டிதரே! கூறிவிட்டார் என்று ‘ஏ’ காரம் போட்டு நிலைமைகளை எண்ணிப் பாராமல், சர்க்கார், பாழடைந்த பங்களாக்களை பணம் கொடுத்து வாங்கி பொதுமக்களின் வரிப்பணத்தை பாழாக்காது என்று நம்புகிறோம்: இந்தக் காரியத்தில் சர்க்கார்: துணிவதற்குமுன் எண்ணித் துணியவேண்டும்; காரணம் ‘பாழடைந்த பங்களாக்களின்’ பிரச்சனை இது!

★

வேண்டுகோள்

மார்ச்சுமுடிய இதுவரை ஒப்புக் கொண்டுள்ள கூட்டங்கள் தவிர வேறு கூட்டங்களுக்கு ஒப்புதல் தர முடியாதவனாக இருக்கிறேன். நண்பர்கள் மன்னிக்கக் கோறுகிறேன். கூட்டத்தை ஏற்பாடு செய்துவிட்டு உரிமையோடு சம்மதம் கேட்கும் நண்பர்கள் இனி அவ்வாறு செய்யாமலிருக்கக் கேட்டுக்கொள்கிறேன். தினசரி கூட்டம் இருப்பதால், நண்பர்களின் கடிதங்களுக்கு தனித் தனி பதில் எழுத முடியவில்லை. இதையே பதிலாகக் கொண்டு, மார்ச்சு முடிய கடிதம் எழுத வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கண்ணதாசன்

சீதை நெறி தவறியவள்! ஏன்?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சுலோகம் 10.

என் வசமாயுள்ள எதுவோ அந்த எனது உள்ளமானது தேவரீரிடத்தில் ஆழ்ந்திருக்கின்றது. பரவசமான அங்கங்களின் விஷயத்தில் வல்லவளல்லாத நான் யாது செய்வேன்?

தோழர்களே! முன்பே குறிப்பிட்டபடி சீதை இங்கும் இராவணன் பலவந்தமாகத் தீண்டிவிட்டான் என்பதை ஒப்புக்கொள்கின்றாள். அங்கஸ்பரிசத்தை அடைந்துவிட்டேன் என்றாலும் அது என் குற்றமல்ல. மயக்கமுற்ற நிலையில் மானமிழந்தேன். நான் என்ன செய்யமுடியும்! பெண் தானே? பலமற்றவள்; ஆகவே, பலவந்தம் செய்யப்பட்டேன்; இது எப்படி என் குற்றமாகும் என்று சீதை கேட்கிறாள். இந்த நெறி தவறியவள் கதையை இந்தச் செந்தமிழ் நாட்டிலே, "மயிர்நீப்பின் வாழாக்கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்" எனப் பரணி பாடி வாழ்ந்த பழம்பெரும் நாட்டிலே, பரப்புவோர் எவ்வளவு நெஞ்சழுத்தம் கொண்டிருக்க வேண்டும்? ஆச்சாரியார் போன்ற பூசுரக்கூட்டத்தாருக்கு அது சரியெனப்படலாம். ஆனால், தமிழ் நாட்டார் அதை ஏற்கமாட்டார்கள் எனத் தெரிந்திருந்தும் மீண்டும் மீண்டும் பரப்ப முயலுகின்றனரே ஏன்?

பின்னர் இலக்குவனை அழைத்துத் தீயை வளர்க்கச்செய்து வலம் வந்து பின்வருமாறு சீதை கூறுகின்றாள்.

சருக்கம் 119. சுலோகம் 27.

'நான் எல்லா தர்மங்களையும் உணர்ந்தவராகிய ஸ்ரீ ராமரிடம் மனத்தாலும் வாக்காலும் பிழையுறாது இருக்கின்றேன் என்பது உண்மையானால், சூரியபகவானும், வாயுபகவானும், திக்குகளும், சந்திர பகவானும், பகலும், இரு சந்திக்காலங்களும், இரவும், பூதேவியும், மற்றவர்களும், நல்லொழுக்கத்துடன் கூடியவளாக அறிகின்றார்கள் என்றால் அக்னி பகவான் என்னை ரட்சிப்பாராக.'' எனக்கூறி தீயில் இறங்குகின்றாள்.

சீதை இராமனிடம் மனத்தாலும் வாக்காலும் தூயவள் என்று மட்டும் கூறுகின்றாளே ஒழிய, மனம், வாக்கு, காயம் என்ற மூன்றில் காயத்தை (உடலை) விட்டு விட்டு ஆணையிடுகிறாள். தன் ஆணைக்குச் சாட்சியாக தூய்மையுள்ளவள் என நிரூபிப்பதற்காகத் தன்னைச் சுற்றி இராவணன் காவல் வைத்திருந்த மங்கையரை அழைக்கவில்லை. இராவணனது தம்பியும் சீதையை இராவணன் சிறைப்பிடித்து வந்த காலத்தில் கண்டித்தவனுமாகிய வீடணனைச் சாட்சியாக அழைக்கவில்லை.

குருபத்தினியைக் கெடுத்த சந்திரனையும், ரிஷி புதல்விகளை காமங்கொண்டு விரட்டி கைகால்களை முறித்தவனும், "துவட்டா" என்னும் துடியிடையாள் பெண் குதிரையாக மாறி உலவியபோது, காமப்பரவசனாகி மோகங்கொண்டு ஆண் குதிரையாக மாறித்துரத்திய சூரிய தேவனையும், தன் நேர்மையை நிலைநாட்ட, ஒழுக்கத்திற்குச் சாட்சி கூற அழைக்கின்றாள் சீதை. எவ்வளவு யோக்கியர்களான சாட்சிகள்?

பின்னர் அக்னியுள் குதித்த சீதைக்குச் சான்றுகூற குபேரனும், வருணனும், எமனும், இந்திரனும், பிரம்மனும் விரைந்தோடி வந்து, இராமரின் வீரப் புகழை எடுத்தியம்பி, இராமனது பிறப்பினுண்மையைக் கூறிச் சீதையை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினர் என வால்மீகி கூறுகின்றாரே தவிர, சீதை நெறி தவறாதவள் என அவர்கள் நிரூபித்ததாகக் கூறவேயில்லை. இருந்தால் அல்லவா கூறுவார்!

பின்னர் அக்னிதேவன் சீதையைத் தன் மடிமீது வைத்த வண்ணம் தோன்றுகின்றான். சீதையை இராமன் முன் இறக்கிவிட்டுப் பின் வருமாறு கூறுகின்றான்.

சருக்கம் 121. சுலோகம் 6.

நன்னெறி நாயகமே! சற்குண சீலையாகுமிவள், தேவரீரிடம் சிறிதும் பிழைபடவில்லை. வாக்காலும் பிழைபடவில்லை. சங்கல்பத்தாலும் பிழைபடவில்லை. பார்வையாலும் பிழைபடவில்லை.

சுலோகம் 7.

"வீர்ய செருக்குற்ற அரக்கனாகிய இராவணனால் இவள் தேவரீரை விட்டுப்பிரிக்கப்பட்டு காட்டிலிருந்து சிறைப்படுத்தப்பட்டு எங்கியவளாய் ஸ்வாதீனமிழந்த நிலையில் கொண்டுபோகப்பட்டாள்." என அக்னி கூறுகின்றான்.

அருந்ததியின் அழகில் மோகித்து அவளைக்கெடுக்க முனைந்த அக்னி தேவன் சீதைக்கு நற்சான்றிதழ் வழங்குகின்றான். சுவரேறித் தாண்டுபவன், வேலி தாண்டுபவளுக்கு நன்னடக்கைப் பத்திரம் வழங்குவதைப்போல அம்மையாருக்கு அக்னி சான்று தருகிறான். இங்கும் சீதை வாக்காலும், மனதாலும், சங்கல்பத்தாலும் பார்வையாலும் பிழைபடவில்லையே எனக் கூறுகின்றானே ஒழிய உடலால் பிழைபடவில்லை எனக்கூறவில்லை. எங்கே இராமன் அதைக்கேட்டு விடுவானோ என்றஞ்சியவனாய் முன் கூட்டியே அதற்குக் காரணமும் காட்டுகிறான். பலம் பொருந்திய இராவணனால் இவள் கொண்டு செல்லப்படும்போது ஸ்வாதீனமிழந்தவளாய் இருந்தாள். எனவே, அப்பொழுது நடைபெற்றவைகளுக்கு இவள் எப்படிப் பொறுப்பு ஏற்கமுடியும்? என வெட்கம்கெட்ட வாதம்புரிகின்றான் அக்னிதேவன்.

இங்குமட்டுமல்ல தோழர்களே! சீதை உடலால் கெடவில்லை என உறுதி கூறாமலிருப்பது, உத்தர காண்டத்திலே, இராமன் சீதையோடு திரும்பிவந்து மகுடம் சூட்டிக்கொண்டு அரசுபுரியும் நாளில், ஊர்மக்கள், இராவணனால் தீண்டப்பட்ட சீதையை இராமர் மீண்டும் சேர்த்துக்கொண்டதைக் கண்டித்ததைப் பொறாத இராமன், சீதையைக் காட்டிற்கு அனுப்பிவிடுகின்றான்.

பின்னர் பல ஆண்டுகளுக்குப் பிறகு தனது புதல்வர்களான லவ குசர்களைச் சந்திக்கின்றான்; உடனே சீதையை அழைத்து வரும்படி வால்மீகி முனிவருக்குத் தூது அனுப்புகின்றான். அப்பொழுது தூதர்களிடம் பின்வருமாறு கூறியனுப்புகின்றான்.

சருக்கம் 95. சுலோகம் 3. உத்தரகாண்டம்.

"இவ்விடம் இருந்து வால்மீகி பகவானது சந்நிதிக்குப் போய் எனது விண்ணப்பத்தைத் தெரியபடுத்துங்கள். அவளைப்போல கற்புடையவள் வேறொருத்தியில்லாத பட்சத்திலும், மனசு, வாக்கு, காயம் இவைகளால் ஏற்படும் எப்படிப்பட்டதாகிய பாவத்திற்கும் இடமாகாதவளாய் இருக்கும் பட்சத்திலும், முனிவர் பெருமானைக் கேட்டு அனுமதி பெற்றுக்கொண்டு இப்படி தோஷரஹிதையாயிருத்தலை இவ்விடத்தில் ருசுச்செய்ய வேண்டும், என்று கூறுகின்றான் இராமன்.

முதன் முறையாக இங்குதான் இராமன் காயம் (உடலை) என்னும் சொல்லைக் குறிப்பிட்டு, உடலாலும் தூய்மையுடையவள் என நிரூபிக்க வேண்டும் எனக்கூறுகின்றான். சீதை அங்ஙனம் உறுதி கூறி தன்னை, கற்பின்பாவை, பொற்பின் செல்வி என உலகறிய நிலை நாட்டினளா என்பதை அறிய அவளுடன் நாம் முற்படும்போது, சீதை முனிவர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும், கின்னரர்களும், ஐம்புவர்களும், வானரர்களும், அரக்கர்களும் கூடியிருந்ததாகச் சொல்லப்படும் அவையிலே வந்து நின்றாள். அவளை அழைத்து வந்த வால்மீகி முதலில் குசலவர்கள் இருவரும் இராமனுக்கே பிறந்தவர்கள் எனச் சத்தியம் கூறுகின்றார். பின்னர் சீதை பேசுகிறாள்."

சருக்கம் 97. சுலோகம் 13.

"நான் மனச்சாட்சியுடன் ஸ்ரீ ராகவரொருவரைத் தவிர வேறு எவருக்கும் சிந்தையில் இடங்கொடாதிருந்தேன் என்பது உண்மையானால் பூமாதேவி எனக்கு இடங்கொடுக்கக் கடவள்."

சுலோகம் 14.

"மனதாலும், வாக்காலும் ஸ்ரீ ராமரையே எப்பொழுதும் பூசித்து வந்தேன் என்பது உண்மையானால், மாதவருக்குப் பத்தினியான பூமாதேவி எனக்கு இடத்தைக் கொடுக்கக் கடவள்."

இவ்விதம் சீதை கூறியவுடன் பூமி பிளந்ததாம். சீதை அதில் புகுந்து மறைந்தாளாம். இவ்வரலாற்றைச் சிறிது ஆராய்வோம்.

கணவன் கேட்கிறான். உடலால் நீ கெடவில்லை என உறுதி கூற என்று? சிந்தையாலும், சொல்லாலும் கெடவில்லை எனப்பதிலுரைக்கிறாள் பத்தினி. என்ன பொருள்? ஏன் சீதை உடலால் கெடவில்லை என உறுதி கூறவில்லை? நேர்மையுள்ளோர் நெஞ்சங்களிலே பீறிட்டுக் கிளம்பும் கேள்விகள் இவை? திருப்பித் திருப்பி மனதையும், வாக்கையும் பற்றிப் பின்னிப் பின்னிப் பேசுகிறாளே தவிர காயத்தைப்பற்றிஎதுவும்பேசமறுக்கிறாள்.

இந்த நெறி தவறிய சீதையின் புண்யகதையைப் படித்துப் பாராட்டிப் பரவசமடைந்து பூசை செய்யும் பார்ப்பனர்கள், எதை எதையோ கண்டிக்கப் புகுந்துவிடுகிறார்கள். வால்மீகியின் காவியம் இணையற்றது. உலக மகா காவியங்களில் ஒன்று. அதையே கம்பன் மூலமாகக்கொண்டான், எனக் கூறப்படும் வால்மீகியின் காதையிலே, சீதை குடித்து விட்டுக் கூத்தடித்ததையும், ஆடையற்றிருந்த அலங்கோலத்தையும், உற்றவர்களான இலக்குவனையும் அனுமனையும் சந்தேகித்ததையும், நிந்தனை மொழிகள் பேசியதையும், மானமிழந்த பின்னும் உயிர் வாழ்ந்ததையும், கணவனால் நிந்திக்கப்பட்டும் உயிர்வாழ்ந்த கேவலமும், விவரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக்கதை நாட்டிலே, நகரங்களிலே, பட்டிதொட்டிகளிலே, படிக்கப்படுகின்றது. தடுப்பார் இல்லை. பண்பாடு குலைகிறது எனப்பதைப்பார் இல்லை. அடுக்காது இந்த அநியாயம் என்றறைவாரைக் காணோம். எடுத்துக் கூறுபவரை, அவ்விதம் கூறுவது தமது கடமை என்றெண்ணி வள்ளுவப் பெருந்தகை, "கடன் என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு" என்று கூறியதைப்போல நாட்டிலே நல்லதொரு தொண்டாற்றி வரும் பகுத்தறிவியக்கத்தைச் சாடிடும் கயவரை என்னென்று அழைப்பது? வள்ளுவப்பெருந்தகையே கூறுகின்றார்.

"ஓதி உணர்ந்தும், பிறருக்கு உரைத்தும், தான் அடங்காப்பேதையின் பேதையார் இல்,"—என்று. பல நூல்களைக் கற்றறிந்து ஆராய்ந்து எடுத்துக் கூறியும்தெளிவுறாத மூடரைப்போல முழு மூடர் இல்லை எனக் கூறுகின்றார். அதையேதான் நாமும் கூற வேண்டியிருக்கிறது. வேறு என்ன கூறுவது? முற்றும்.

ப. நெடுமாறன்

திராவிட நாகரீகம்!

"சில ஆண்டுகளுக்கு முன்னால் பம்பாயில் ஒரு மொழி ஆராய்ச்சிக் கூட்டத்திற்கு போய் இருந்தேன். வங்காளி-மராத்தி, குஜராத்தி-இந்தி போன்ற மொழிப் பிரச்சனைகள் அங்கே பேசப்பட்டன. முடிவாக 500 வருடங்களுக்கு முந்திய பழைய இலக்கியமுடைய மொழி குஜராத்தி என்று முடிவு செய்யப்பட்டது. அப்பொழுது என்னை நோக்கி, தமிழில் இப்படி ஏதாவது பண்டை இலக்கியம் உண்டா? என்றார்கள். 2000 ஆண்டுக்கு முற்பட்ட இலக்கியங்களே தமிழில் உள்ளன என்றேன் நான். அவர்கள் திகைத்துப் போனார்கள். இந்திய வரலாறு ஒழுங்காக எழுதப்படவில்லை. இந்திய உபகண்டத்தின் சரியான வரலாறு எழுதப்பட வேண்டுமானால், இமயத்திலிருந்து தொடரக் கூடாது. கன்னியாகுமரியிலிருந்துதான் ஆரம்பமாகவேண்டும். ஆரிய நாகரீகத்திற்கு முன் திராவிட நாகரீகம், இந்நாடு முழுதும் மட்டுமல்ல, மெசபடோமியா, ஈரான் போன்ற நாடுகள் வரை பரவி இருந்தது. அரசியல் நிலை காரணமாக 'திராவிட' என்ற சொல் பிடிக்காமலிருக்கலாம். அதற்காக வரலாற்றை அறியாமற கண்ணை மூடிக்கொள்ள முடியாது"

ஆர். கே. சண்முகம்

(மறைந்த அரசியல் மேதை)

சமுதாயமா? பொருளாதாரமா?

தென்னகத்து அரசியல் உலகிலே எத்தனையோ அரசியல் கட்சிகள்! ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை! கொள்கைக்காகக் கட்சி, கட்சிக்காக கொள்கை, தலைவனுக்காகக் கட்சி இப்படியும் சில! எத்தனையோ இயக்கங்கள் உலவினாலும், அண்ணா கண்ட இயக்கம், இவை அனைத்தையும் விட்டுத் தனித்து இயங்குகின்றது; அதன் தனித் தன்மையும், சிறப்பியல்புகளும், மற்ற கட்சிகளின் கொள்கைகளையும், திட்டங்களையும், ஆராய்ந்தெடுத்த முடிவினின்று தெள்ளிதிற் புலனாகும்.

தேசிய இயக்கத்தை எடுத்துக் கொண்டால், இந்திய உபகண்டத்துக்கு அது, பெயரளவில் உரிமையை வாங்கித் தந்ததோடு சரி! இருக்கலாமா, போகலாமா என்று ஊசலாடிக் கொண்டிருக்கும், சமதர்ம இயக்கத்தை எடுத்துக் கொண்டால் காந்தியம் கலந்த ஓர் பொருளியல் தத்துவத்தைப்பேசுவதோடு, அதன் வேலை முடிகின்றது! திடீரென்று சந்திப்புகளும், சல்லாபங்களும் ஏற்பட்டு, காதல் மொழிகள் பேசி, அரசியல் உலகிலே விசித்திரமானதோர்கலப்புமணம்செய்துகொண்ட பிரஜா சோஷலிஸ்ட் கட்சியோ பூதான இயக்கத்தில் நம்பிக்கை கொண்டு, அத்தகையதோர் பொருளியல் பணியினை செய்து கொண்டு ஆறுதலடைகிறது. லீக் கட்சியோ, பாகிஸ்தானை வாங்கி, வட இந்திய முஸ்லீம்கள் கையில் கொடுத்து விட்டு, இப்போது இஸ்மாயில் சாகிபின் சட்டைப்பைக்குள், நல்ல ஓய்வு எடுத்துக் கொண்டுள்ளது! பொதுவுடமைத்தோழர்களைப் பற்றிக் கூறப் புகுந்தால், அவர்களும் "வர்க்கப் போராட்டத்தில்" நம்பிக்கைவைத்து, பிரத்தியட்சகுணம்சங்களை-'யதார்த்த நிலையில் நின்று கொண்டு ஆராய்வதில் திராத அரசியல் பக்தி கொண்டிருக்கின்றனர்! இப்படிப்பல பல!

இவைகளினின்று, அண்ணாவின் பாசறையினது தனித்தன்மை என்ன புலனாகிறது என்று வினவலாம். நாட்டிலே பல நூற்றாண்டு காலமாக பவனிவரும் உளுத்துப் போன கருத்துகள்-கேடு தரும் எண்ணங்கள் சமுதாயத்தை எந்த அளவுக்கு அரித்துக் கொண்டே வருகின்றன என்பது நாடறிந்த உண்மை. இத்தகைய கருத்துக்களுக்கு ஆதரவு கொடுத்து ஆலவட்டம் வீசிக் கொண்டு சந்திக்கு வந்த கட்சிகள் பல! இது ஒரு ரகம். இத்தகைய கருத்துக்களைப் பற்றி திட்ட வட்டமாக எதுவும் சொல்லாமல் மௌனம் சாதிக்கும் கட்சிகள் இன்னும் சில! இது இரண்டாவது ரகம்!' இப்படிப்பட்ட கேடு தரும் எண்ணங்களுக்குஎதிர்ப்புக்காட்டிப் பேசினால், எங்கே, அத்தகைய எண்ணங்களைத் தழுவி நிற்கும் மக்களின் புன்சிரிப்பையும்-ஆதரவையும் இழந்து விடுவோமோ என்ற அச்சம் இன்னும் சில கட்சிகளுக்கு! இது மூன்றாவது ரகம்!!

இந்த மூன்றுவிதமான அணிகளில், எந்த அணியிலும் சேராதது தான் அண்ணாவின் இயக்கம். இதில்தான் அதன் தனித்தன்மை உள்ளது. அது அரசியலைப் பற்றியே பேசவில்லை; பொருளாதாரத்தைப் பற்றியே பேசவில்லை; சமுதாயத்துறையைப் பற்றியே பேசவில்லை; மாறாக, அரசியலைப்பற்றியும் பேசுகின்றது. பொருளாதாரத்தைப் பற்றியும் விளக்குகின்றது. சமுதாயத்தைப் பற்றியும் அலசி ஆராய்கின்றது! ஆக, "அரசியல் பொருளியல்-சமூக இயல்" ஆகிய மூன்று துறைகளின் கூட்டுத்தொகுப்புதான் அதன் கொள்கை-திட்டம்-லட்சியம் எல்லாம். சமுதாயத் துறையிலே மலிந்து காணப்படும், நாற்றமடிக்கும் நடைமுறைகளை எடுத்துச் சொன்னால், எங்கே நாமதாரிகளின் நல்லெண்ணத்தையும், பூசுரர்களின் புன்சிரிப்பையும், பக்த கோடிகளின் கண்வீச்சையும் இழந்துவிடுவோமோ என்ற அச்சம், அண்ணா கண்ட இயக்கத்துக்கு எப்போதும் இருந்ததில்லை—இருப்பதில்லை என்பதுதான அதன் தனித்த இயல்பாகும்!

பயம் கொஞ்சமுமின்றி, துணிந்த நெஞ்சத்தோடு, சமுதாயத்திலே மலிந்து கிடக்கும், ஓட்டைக் கருத்துக்களுக்கு பேச்சு மூலமாகவும், எழுத்து வாயிலாகவும், சாவுமணி கொடுக்கின்றார்களே இவர்கள் என்று ஆயாசத்தோடும் பொறாமையோடும் நம்மைச்சாடி நிற்கும், மதிப்பிற்குரிய பொதுவுடமைத் தோழர்கள், என்ன சொல்வதென்றே தெரியாமல் - புரியாமல் "சமுதாயச் சீர்த்திருத்தம் இப்போதுதேவையில்லை-பொருளாதார முன்னேற்றம் வந்து விட்டால் சாதி சமயபேதங்கள் சமுதாய ஊழல்கள் எல்லாம் மறைந்து விடும்" என்ற கவைக் குதவாத வாதத்தை மக்கள் முன்னிலையிலே வைக்கின்றனர். வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உடனடியாக ஏற்படுத்தி விட்டால், சமுதாயப் பணி என்பதே தேவையில்லாத தாகிவிடும் என்ற அவர்களது பேச்சு, அவர்களை வெகு நாட்களாகப் பிடித்துக் கிடக்கும் "அரசியல் வியாதி" யாகும்!

சமுதாயத்துறை ஒழுங்கு செய்யப்பட்டால்தான் அரசியலும் - பொருளியலும் வெற்றிபெறும் என்பது நமது கருத்தாகும். பொதுவுடமைக் கருத்துக்கள் சிறந்தவைகளாக இருக்கலாம். மறுக்கவில்லை, இது வரை மறுத்ததுமில்லை. ஆனால், முதலில், பக்குவப்பட்ட மனித உள்ளங்களின் எண்ணிக்கை அதிகமானால் தான் 'பொதுவுடமை' வெற்றியடைய முடியும் என்று நம்புகிறவர்கள் நாம். அறிஞர் அண்ணா அவர்கள் கூறியபடி தஞ்சாவூர் சம்பா விதை சிறந்ததாக இருக்கலாம். ஆனால், பக்குவப்பட்ட நிலத்தில் அதனைத் தூவி சாகுபடி செய்வதற்குப் பதிலாக, பாறையின் மேல் தூவினால், நல்ல விதையாக இருந்த போதிலும், பலன் தராது தானே! அதுபோலவே தான், பொதுவுடமை எண்ணங்கள், எவ்வளவு தான் போற்றுதற்குரியனவாயிருந்த போதிலும், பக்குவப்படாத, சீர்திருந்தாத மனித உள்ளங்களிலே தூவினால் அவை வெற்றியடையாது என்ற உண்மையை பொதுவுடமை இயக்கம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஆகவேதான் பொருளாதார சமத்துவம்வந்துவிட்டால்,அரசியல் சமுதாயம் எல்லாம் சரியாகி விடும் என்று கூறும், அவர்களது போக்கிலிருந்து நாம் வேறுபடுகின்றோம்.

மக்களின் பலரது உள்ளங்கள், இது வரையில், முதலாளிகளால், நிலப்பிரபுக்களால், பூசுரர்களால், புராண இதிகாசங்களால், வேதங்களால், வேதங்களைப் பரப்பும் வேதியர்களால், எந்த முறையில் உருவாக்கப்பட்டு வந்துள்ளனஎன்பதை முதலில் கண்டறிய வேண்டும். களைகளைத் தூர எறிந்து விட்டுத் தான், விதையை விதைக்க வேண்டுமே தவிர, அரசியல் உலகைப் பொறுத்தளவில், அதிலும் நம் தென்னாட்டைப் பொறுத்தளவில், விதைத்து விட்டால், களை தானாகப் போய்விடும் என்ற போக்கு பயனற்றது, வேதனைத் தரக் கூடியது என்பதை, எதிர் முகாமிலுள்ளோர் புரிந்து கொள்ள வேண்டும்.

சட்டத்தின் மூலமும்—அதிகாரத்தின் மூலமும் ஒரு கொள்கையை பின்பற்றுமாறு மக்களை வற்புறுத்து வதை விட, அவர்களாகவே அக்கொள்கையை உணர்ந்து நடக்கக் கூடிய, சூழ் நிலையை உண்டாக்குவது தான் எவ்வளவோ மேல். மதுபானத்தால் மக்கள் மன்றம் சீர் குலையும், குடித்தால் குடியே கெட்டு விடும் என்ற பொது உண்மையைப் புரிந்துக் கொண்டு மக்கள் மது அருந்தாமல் திருந்தும் முறை நல்லதா? அன்றி குடித்தால் சட்டம் தண்டித்து விடுமே என்ற பயத்தால் மது அருந்தாமல் இருப்பது நல்லதா? இரண்டு பெண்களை ஒரு தனி மனிதன் திருமணம் செய்து கொள்வதால் தொல்லைகள் பல சூழும் என்ற விளைவை உணர்ந்து அவ்வாறு நடக்காமலிருப்பது நல்லதா? அல்லது இரண்டு பெண்களை மணந்தால் சட்டத்தால் தாக்கப்படுவோமே என அஞ்சி ஒதுங்குவ்து நல்லதா? இவைகளில் எது பலனளிக்கும் என்பதை சிந்தித்துப் பார்த்தால், மனிதன் சட்டத்தால் திருந்துவதை விட, 'உணர்ச்சி' யால்-சிந்தனையால் திருந்துவது தான் நீடித்த பலனைத் தரும் என்பது வெள்ளிடை மலையாகும்.

விதவைகள் இனி திருமணம் செய்து கொள்ளலாம். சட்டம் கூறுகின்றது. இந்த அரசியல் சட்டத்தால், இது வரை, திருமணமே செய்ய முடியாத விதவைகளுக்கு மறுமணம் செய்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது; வாய்ப்பும்-வசதியும் விதவைகள் பெற்றனரே தவிர, அத்தகைய வாய்ப்பையும் வசதியையும் பெறக் கூடிய விதவைகளுக்கும்-அவர்களை மணஞ்செய்யும் ஆடவர்களுக்கும் வைதிக புரியிலிருந்தும்,அவர்களைப் போற்றும் மக்களிடமிருந்தும், எதிர்ப்பு இல்லை என்று சொல்லி விட முடியுமா? அது போலவே தான், கலப்பு மணம் செய்து கொள்ளலாம் என அரசாங்கச் சட்டம் கூறலாம். சட்டம் கூறி விட்டால் மட்டும்போதுமா? அதனைச் சமுதாயம் உணரவேண்டுமல்லவா? ஒரு சிறந்த சட்டத்தின் உருவான பலன்களை நாம் உடனடியாகக் காண வேண்டுமானால், அந்தச் சட்டத்தின் தன்மைகளையும், நல்ல அம்சங்களையும் மக்கள் முதலில் உணரவேண்டும். உணர்ந்து கொள்ளக் கூடிய சூழ் நிலையை உருவாக்க வேண்டும் அப்படியானால்தான் 'அரசியல்' வெற்றி பெற முடியும். திருத்தப்படாத சமுதாயத்தை - திருத்த முயன்றால் - கல்லாலும் சொல்லாலும் தாக்கும் சமுதாயத்தைத் திருத்தாமலேயே வைத்துக் கொண்டு, சட்டத்தின் மூலம் சாதிக்கலாம் என எண்ணுவதன் விளைவு, காதலித்துத் திருமணம் செய்து கொள்பவர்களின் வாழ்க்கையைப் போல் இனிக்காது. மாறாக, பலாத்காரத் திருமணத் தம்பதிகளின் வாழ்க்கையைப் போல் கசக்கத் தான் செய்யும்! பொதுவுடமை பேசும் இந்திய நாட்டு ஆத்மாக்கள் இதனை உணர்க!

இந்த விளக்கம் போதவில்லையானால், பொதுவுடமைக் கட்சியின் அரசியல் வாழ்க்கையில் குறுக்கிட்ட மற்றொரு சம்பவத்தின் மூலமே, உண்மையை அவர்களுக்கு நாம் விளக்குவோம். கடந்த திரு-கொச்சி பொதுத்தேர்தலின் போது எழுந்த நிகிழ்ச்சிதானது! இந்த நிகழ்ச்சியைப் பொதுமக்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொதுவுடமையரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"காங்கிரசுக்குப் போடாத ஓட்டுகளெல்லாம் சாத்தானுக்குப் போட்ட ஓட்டுகளாகும். எதிர் கட்சிகளுக்கு ஓட்டுப் போட்டால். இக லோகத்தில் தெய்வசாபத்திற்கும், பரலோகத்தில் நாசப்படுகுழிக்கும் தான் ஆளாவீர்கள்" என்று கிருத்தவப் பாதிரிகள் திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில் தீவிரமாகப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். காங்கிரசுக்கு ஓட்டளிக்காத கிருத்தவர்களை மதப்பிரஷ்டம் செய்வதாக அவர்கள் பயமுறுத்துகின்றனர்."

"கிருத்தவப் பாதிரிகள் இவ்விதம் பகிரங்கமாக அரசியலில் பங்கெடுத்துக் கொள்வதைக் கண்டித்தும், இத்தகைய பிரச்சாரத்திற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கோரியும், பிரதம மந்திரி பண்டித ஜவகர்லால் நேருவுக்கு பார்லிமெண்ட் கம்யூனிஸ்டு கட்சி தலைவரும், உபதலைவருமான தோழர்கள் ஏ. கே. கோபாலன், ஹிரேன் முகர்ஜி, ஆகியோர், ஜனவரி 18ம் தேதியன்று ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார்கள்"

இப்படி ஒரு செய்தி அவர்களது தமிழ் நாட்டுக்கட்சிப் பத்திரிகையில் [31-1-54] வெளியாகியிருக்கின்றது' இதன் பொருளென்ன? பாதிரிகளின் பிர்ச்சாரத்தைக் கண்டு பாட்டாளிகளின் தோழர்கள் என தங்களைக் கூறிக் கொள்பவர்கள் அஞ்சுகின்றார்கள். ஆகவே கண்டிக்கின்றார்கள்—கடிதம் மூலம்—பண்டித நேருவிடம்! ஆச்சரியமாக இருக்கின்றதல்லா?

சம்பந்தப்பட்ட இந்த தேர்தலிலே பொதுவுடமையரும் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத் தக்

நாற்றங்கிடக்குது மூலையிலே, சோற்றைப்போடடி மகளே!

குப்பை நிறைந்த தமிழ்நாட்டை-முதலில் கூட்டிப் பெருக்குங்கள்!

ஏழை - பணக்காரன் - இது மட்டுந்தானு சீர்கேடு?

கது. பொதுவுடமையரை எதிர்த்து கூட கண்டுகூட அவர்கள் அஞ்ச வில்லே. கவலேப்படவில்லே ஆனுல் மதவாதிகளின் பயமுறுத்தலேக் கண்டு மிரண்டிருக்கிருர் கோபாலன்!

"நரகம் சம்பவிக்கும்", "தெய்வ நிந்தனே ஏற்படும்". "மதப்பிரஷ்டம் செய்யப்படும்" — என்பன போன்ற பாதிரிகளின் எதிர்ப்புப் பேச்சால், மக்கள் மயங்கி, மருண்டு திணறித் திண்டாடுவார்கள்-என்ன செய்வது, என்ற ஏக்கத்தின் விளேவினுல், வேறுவழியில்லாமல் நேரு பெருமானுக்குத் தீட்டினுர்கள் நீண்டதொரு கடிதத்தை! கடிதத்தைத் தீட்டியவர்கள் கம்யூனிஸ்டுகள்—அதுதான் விந்தை! மத போதகர்களின் பேச்சுக்கு மக்கள் நம்பிக்கை அளிப்பார்கள்—மரியாதை கொடுப்பார்கள்—அந்த நிலேயில்தான் மக்களும் உள்ளனர் என்ற உண்மை அவர்களுக்குப் புரிகிறது. அது அவர்களது அரசியல் நடவடிக்கையைப் பாதிக்கின்றது. ஆகவேதான் பயந்தார்கள்! தீட்டினுர்கள் கடிதத்தை!

இப்போதாவது பொதுவுடமையர் உணர்ந்தாக வேண்டும். பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறுகின்றனர். அதற்காகத்தான், மக்களேத்திரட்டி அரசியலில் ஈடுபடுகின்ருேம் என்றும் கூறுகின்றனர். அரசியலில் ஈடுபடும் போதோ, மேலே குறிப்பிட்டதைப் போன்ற சிக்கல்கள்! தொல்லே நிற்கின்றனர் என பொதுவுடமையர் கூறுகின்ருர்களல்லவா? அந்த தொழிலாளர்களின் நிலேயையுந் தான கொஞ்சம் எடுத்துக்கொள்வோமே. எடுத்துக்காட்டாக, மீனுட்சி மில்லில் வேலேசெய்யும் தொழிலாளி கூலி உயர்வுக்காக வேண்டி போராடுகின்ருன். பட்டினி கிடந்து வேலே நிறுத்தம் செய்கின்ருன். அவனது போராட்டத்தின் விளேவாக ஒரு ரூபாயாக இருந்த கூலி, ஒன்றே கால் ரூபாயாகக் கூடுகின்றது. இந்த வெற்றிக்குக் காரணம் தனது போராட்டந்தான் என்பதை அவன் மறந்து, தான் வணங்கும் மீனுட்சியம்மையின் கிருபாகடாட்சத்திஞல் தான் கூலி உயர்ந்தது என்ற முடிவுக்கு வருகின்ருன். தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொளுத்துகின்ருன் அம்மைக்கு! இரத்தத்தைச் சிந்தி நாலணு கூலி உயர்வைப் பெற்றபிறகு, எட்டணு செலவழித்து தனது ஆத்ம தாகத்தை தீர்த்துக் கொள்கிருன்! தொழிலாளர்களின் நிலே இப்படி! நாலணு கூலி உயர்வை வாங்கிக்கொடுப்பது மட்டுந்தான் பொருளாதாரப் போராட்டமென்றெண்ணிவிடுதல் தவறு. அந்த நாலணுவையும் அவன் எதற்காகச் செலவழிக்கின்ருன் என்பதைக் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனிக்கும் போதுதான் 'சமுதாயப்பணி' எவ்வளவு அவசியமாக தேவை என்ற முடிவுக்குப் பொதுவுடமையர் வரமுடியும்.

யைப் பரப்புகின்ருர்களாம், நமது நாட்டு "பொதுவுடமை ஆத்மாக்கள்!" வேதனே, விசித்திரம். என்ன செய்வது? எப்படித்தான் பொதுவுடமை மலர முடியும்? இப்படிப்பட்டவர்களே, இவ்வண்ணமே வைத்துக்கொண்டு "வர்க்கப் போராட்டம்" நடத்திஞல் தான் என்ன பயன் உண்டு? அவர்களின் சிந்தனேக்கே இதனே விட்டு விடுவோம்.

இப்படி நாம் கூறும்போது பொருளியல் துறைக்கான பணியே தேவையில்லே என்பதல்ல நமது கொள்கை. பொருளியல் துறை பயனடைய வேண்டுமாஞல்—அரசியல் பலன் தரவேண்டுமாஞல், சமுதாயப்பணி முதலில் மிக மிக தேவை என்பதுதான் நமது எண்ணம். அதிலும் இந்த நாட்டைப் பொறுத்தளவிலே சமுதாயப் பணி அவசியம் - அவசரமுங்கூட. கார்ல் மார்க்ஸ் எழுதியிருக்கும் **British Rule in India** என்ற நூலே ஆராயப் புகுந்தால்—அதுகூட நமது கருத்தைத்தான் வலியுறுத்துகின்றது. "சிறு சிறு வகுப்புகளால்—சாதிப்பிரிவினேகளால் — உயர்வு தாழ்வுகளால், சமுதாயம் தன்னே வளர்த்துக்கொள்ளாமல், மாருத நிலேயைப் போய் அடைந்தது." என்கின்ருர் மார்க்ஸ்

ஆகவே நிலம் பண்பட வேண்டும். நிலம் பண்பட்டால்தான் பயிர் செழிக்கும். பயிர்செழித்தால்தான் கதிர் முளேக்கும்; மக்கள் மனம்

சட்டமும் அதிகாரமும் வலுவைத் தருமா?

கள்! அவர்களது பாணியிலேயே கூறவேண்டுமாஞல், இது, அவர்கள் திரு, கொச்சியிலே கண்ட "பிரத்தியட்ச உண்மை-குணும்ச" மாகும்! இப்படி இருக்கும்போது எது முதலில் தேவை? சமுதாயப் பணியா - பொருளாதாரப் பணியா என்பதை அவர்களின் "சுயகுண தோஷ விமர்சனத்துக்கே" விட்டு விடுவோம்!

உளுத்துப்போன இந்தசமுதாயம் உருவான நிலே பெறல் வேண்டும் முதலில். அப்போததான் பொதுவுடமைக் கருத்துகள் வெற்றி பெற முடியும். இதற்கான இன்னும் சில சான்றுகளேக்கூட கூற முடியும். 1946-ல் குன்னூரில் சர். சி. பி. ராமசாமி ஐயர் பேசும் பொழுது, கம்யூனிஸத்தை ஒழிக்க வேண்டுமாஞல் கடவுளேயும் மதத்தையும் காப்பாற்றி வாழுங்கள் என்று பேசியிருக்கின்ருர். "இந்தியாவில் கம்யூனிஸ்ம் வளர்ந்து விடும் என்ற பயம் வேண்டாம். காரணம் அங்கு இந்துமதக் கோட்பாடுகள் இருக்கின்றன" என்று முன்பொரு தடவை பிரிட்டன் இதழ் ஒன்று தீட்டியது. இவைகளெல்லாம் எதனேச் சுட்டிக் காட்டுகின்றது என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமல்லவா? அப்படியாஞல் எது முதலில் தேவை? சமுதாயமா? பொருளாதாரந்தாஞ?

தொழிலாளர்கள் அத்தனே பேருமே எங்கள் பினுல்தான்

இம்மட்டோ? 'பிள்ளேயார் சிலே' உடைப்புப் போராட்டம் நடைபெற்ற சமயத்தில், 'பிள்ளேயார்' சிலேகளே 'உடைத்ததற்காக, சென்னே சிம்சன் கம்பெனிதொழிலாளர்கள், உடைத்தவர்களேத்தாக்கி "இரத்தப் புரட்சி" 'நடத்தி'யிருக்கின்றனர்! யாருக்கு கோபமும் - ஆத்திரமும் வரவேண்டுமோ, அவர்களுக்கில்லாத அக்கரையும், வெறித்தன்மையும் இந்த விஷயத்தில் தொழிலாளர்களுக்கிருக்கின்றது.

இன்னும் உண்டு. சில காலத்துக்கு முன்னர் தஞ்சையிலே நடந்ததே ஒரு கோரச் சம்பவம்! என்னவென்று எண்ணுகிறீர்கள்? மாரியம்மனுக்கு எப்படித் திருவிழா நடத்தவேண்டுமென்பதிலே கருத்து வேற்றுமை! கம்யூனிஸ்டுக் கட்சியில் பற்றுள்ள விவசாயிகளுக்கும்—காங்கிரஸ் கட்சியில் பற்றுள்ள விவசாயிகளுக்கும் இடையேதான் இந்த கருத்து வேற்றுமை! மன அதிருப்தி! அதன் விளேவு கலகம்! ஒருவர் படுகொலே, பலருக்குப் படுகாயம், ஐவர் கைது! தஞ்சை மாவட்டம் மன்னூர் குடிக்கருகிலுள்ள ஒரு கிராமந்தான் சம்பவம் நடந்த இடம்! இதிலே குறிப்பிடத்தக்க தென்னவெனில் கலகத்தில் ஈடுபட்டவர்கள் விவசாயிகள்-தொழிலாளிகள்!

இந்த நிலேயிலே இருக்கக்கூடிய தொழிலாளிகளிடத்திலே-விவசாயிகளிடத்திலேதான் பொதுவுடமை

பண்படல் வேண்டும்; பண்பாட்டால் தான் நல்ல அரசியல் உருவாகி அது நமது கைக்கு வரும்; அத்தகைய அரசியல் உலகிலேதான் வர்க்கபேதம் ஒழியும், 'பொருளாதாரம்' பயன்பெறும். கள்ளக் காட்டையும் கரும்புச் சோலேயாக்கலாம். எல்லாம் நம் கையில்தான் உள்ளது; அண்ணு கண்ட இயக்கம் அதனேத்தான் எடுத்துரைக்கிறது.

—ஆ. மீ. அலிசேக்மன்சூர்

அதுவும் உண்மைதான்!

பள்ளிக் கூடத்தில் எல்லாப் பிள்ளேகளும் உபாத்தியாயரும் புகைப் படம் எடுத்துக் கொண்டார்கள். உபாத்தியாயர் ஒவ்வொரு பிள்ளேயும் ஒரு புகைப் படம் பிரதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினேத்து பிள்ளேகளிடம் பின் வருமாறு சொன்ஞர்: "யோசித்துப் பாருங்கள். உங்கள் பிற்காலத்தில் நீங்கள் பெரியவர்களான பின்பு இந்த படத்தைப் பார்த்தால். 'இதோ ரோஷ்; இவளுக்கு இப்போ கல்யாணமாயிடுத்து', இதோ பில்லி! இவன் கடல் கடந்து போயிருக்கான்' என்றெல்லாம் மகிழ்ச்சியோடு பேசிக் கொள்ளலாமல்லவா?"

அப்போது அந்த அறையில் வெளிப்புறத் திலிருந்து ஒரு மெல்லிய குரல் கேட்டது: இதோநமது வாத்தியார். அவர் இப்போ செத்துப் போஞர்!

பாராட்டுக் கூட்டம்

பொதுத் தேர்தலில் பாகனேரி ஆர். வி. சாமிநாதனே எதிர்த்து நின்ற தோழர் வி. நாகப்பா சிறை சென்று வந்ததை முன்னிட்டு 23-1-55 அன்று மாலே பாகனேரியில் நாவலர் நெடுஞ்செழியன் தலேமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடை பெற்றது. தோழர்கள் திருஞானம், காந்தி, சுந்தரம், சேது, சுப்ரமணியம் ஆகியோர் பாராட்டு விழாவை முன்னின்று சிறப்பித்தனர். முடிவில் தோழர் நாகப்பா பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

அடுத்த இதழில்...

'இலக்கியத்தில் காதல்' பகுதியில்

'கூளப்ப நாயக்கன் காதல்' இடம்பெறும்

காரை முத்துப்புலவர் எழுதுகிருர்.

பிப்ரவரி 12, 13 தேதிகளில்

பெங்களூரில்

தி.மு.க. மாநாடுகள் நடைபெறும்

வணங்காமுடி

(மாதம் இருமுறை)

விரைவில் வெளிவருகிறது

விபரங்களுக்கு:

நிர்வாகி,

'வணங்காமுடி'

S. M. L. தெரு,

தேவகோட்டை.

சுழன்றோடும் நதியின் அலைகள் மரண கோஷங்களை யெழுப்புவதாக அவர்களுக்குப்பட்டது. கமலினி ஆற்றில் அடித்துக்கொண்டு போகப்பட்டாள் என்றே அவர்கள் முடிவுகட்டினர். "கமலினி" என்று சோகம் தட்டும் குரலில் கூவினாள் நந்தினி. ஆற்றைப் பார்த்தபடி அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டாள் கருநாக மங்கை.

"அக்கா!" என்று ஒரு குரல் அமைதியாகக் கேட்டது! ஆவலோடு திரும்பிய மங்கைக்கு அந்தக் குரலில் இருந்த சோகம் பிடிபடவில்லை. நந்தினியும் ஆவலோடு திரும்பிப் பார்த்தாள். அங்கே விழியிடை நீர் தேக்கி கமலினி நின்று கொண்டிருந்தாள். மங்கையும் நந்தினியும் ஏக காலத்தில் "கமலினி! இங்கேயா இருக்கிறாய்! நாங்கள் பயந்தே போய் விட்டோம்!" என்று பயம் ததும்பக் கூறினார்கள். கமலினி மௌனமாக நின்றாள். அவள் கண்கள் மட்டும் நீரைக் கக்குவதை நிறுத்தவில்லை. "ஏன் கமலினி, ஏன் அழுகிறாய்?" என்று பரிவோடுகேட்டாள் மங்கை. கமலினி என்ன பதில் சொல்லப் போகிறாள் என்று ஆவலோடு எதிர்பார்த்தாள் நந்தினி.

"ஒன்றுமில்லை!" என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் கமலினி.

காரணத்தை அறிந்து கொள்ள மங்கை துடித்தாள். இடைதுறை நாட்டிலே வேவு பலிக்கவில்லையோ என்று அவள் ஐயுற்றாள். கமலினியின் கண்ணீருக்கும் அதற்கும் தான் தொடர்பு இருக்க வேண்டும் என்று அவள் கருதினாள். இடை துறை நாட்டுப்போர் பற்றி அறிய ஆவலுள்ளவளாக இருந்தாள் நந்தினி. கமலினி எதற்கும் வாய்திறக்கவில்லை, கண்ணீர் மட்டும் சுரந்து கொண்டே இருந்தது!

மங்கை அவளைப் பரிவோடு உட்கார வைத்து, "என்ன சங்கதி கமலினி! ஏன் அழுகிறாய்?...எங்களைக் குழப்பாதே!" என்றாள்.

கமலினி மெதுவாக "ஒன்றுமில்லை. நீங்கள் பேசிக் கொண்டிருந்தது என் எண்ணங்களைக் கிளறி விட்டு விட்டது. என் வாழ்விலே நேர்ந்த பயங்கரமான சம்பவங்கள் என்னைத் தாள முடியாதவளாகச் செய்துவிட்டன," என்றாள்.

நந்தினிக்கு இப்போது ஆவல் மீறிற்று. "என்ன சம்பவங்கள்?" என்று அவசரமாகக் கேட்டாள்.

கமலினி தலையைக் குனிந்து கைகளால் பூமியில் கோலம் போட்டவாறு பேச ஆரம்பித்தாள்:

"நெறியோடு நின்று காதலும் மணமுமாக வாழ ஆசைப்படும் உங்களிடம் அந்தப்பயங்கரச் சம்பவங்களை எப்படிச் சொல்வேன்?" என்று விம்மினாள். அந்த விம்மல் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் ரகசியங்களை அறிந்து கொள்ளும் ஆவலில் மங்கையும் நந்தினியும் மௌனமாக இருந்தனர்.

கமலினி மீண்டும் தொடர்ந்தாள்:

"இடைதுறை நாட்டில் வேவு காரியமாக நான் நியமிக்கப்பட்டதிலிருந்து, இடைதுறைத் தலைநகரிலேயே நாடோடிபோல் வேஷம் போட்டு வாழ்ந்து கொண்டிருந்தோம். சந்திகளிலே ஆடுவதும், ஆட்டத்தைக்கண்டு ரசித்தவர்கள் கொடுத்ததைக் கொண்டு வாழ்வதும், அந்த நேரங்களிலும் அரண்மனை ரகசியங்களைத் தெரிந்து கொள்வதுமாக இருந்து வந்தேன். தங்கிக்கொள்வதற்கு மட்டும் வணிகர் ஒருவர் தம் குடிசையிலே இடம் கொடுத்திருந்தார். இத்தனையிலும் பருவ உணர்ச்சிகள் என்னைத் தாக்காமலேயே வாழ்ந்து வந்தேன். நாட்டிலே என்னைப் பார்ப்போர்கள் யாரும் எனக்காகப் பரிதாபப்படும் அளவிலேதான் என் வாழ்வு இருந்தது. 'ஐயோ பாவம்' எவ்வளவு அழகாக இருக்கிறாள்? இப்படி நடுத்தெருவில் ஆடிப்பிழைக்க வேண்டியவளாய் இருக்கிறாளே!" என்ற பச்சாதாபக்குரலை அடிக்கடி கேட்பேன். அப்போதெல்லாம் என்னைப்பற்றிய கவலையே எனக்கு எழுவது கிடையாது!. ஆடியும் பாடியும் அவல நிலையில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஒரு கொள்கைக்காகத்தானே ஏற்பட்டிருக்கிறது என்று மனம் தேறுவேன். இந்த நிலையிலே அரிசங்கமனின் ஆட்கள் அடிக்கடி இடைதுறை நாடு வருவதையும் கண்காணித்துக் கொண்டிருந்தேன்.

"ஒரு நாள் வணிகரின் குடிசையிலிருந்து புறப்பட்டேன். நதியில் போய் குளித்துவிட்டுவரலாம் என்ற எண்ணத்தில்தான் போனேன். அப்போது நான் நாடோடியாக இல்லை. குலமுறைகாக்கும் சோழ மங்கையாக குனிந்த தலை நிமிராத கோதையாக ஆபரணங்களால் அழகு படுத்திக் கொள்ளாதவளாக, அவிழ்ந்த கூந்தலையும் முடிக்க மறந்தவளாக, தொடர்ந்து வரும் துணையற்ற—தன்னந்தனியளாக நதிப்புறம் நோக்கிச் சென்றேன். எப்படியாவது அரண்மனைக்குள் சேர்ந்து கொண்டு அரிசங்கமனுக்கும், இடைதுறையானுக்கும் உள்ள உறவைக் கிரகித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமே அப்போதும் என் மனதில் நின்றது.

"நதியிலே குளித்துக் கொண்டிருக்கும்போது என்மேலாடை கரையிலே யிருந்தது. குளித்துவிட்டு மேலே வந்து பார்க்கும்போது மேலாடையைக் காணோம். ஈரச் சேலையின் ஒரு பகுதியையே மேலாடையாகவும் ஆக்கிக்கொண்டு, சுற்று முற்றும் பார்த்தேன், காற்றடித்து மேலாடையெங்கும் பறந்து போயிருக்குமோ என்று ஒரு சந்தேகம். கடைசியாக ஒரு கொடியினருகில் என் மேலாடை தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஓடிப்போய் அதை எடுக்கும்போது, நறுக்கென்று ஒரு கை என் கரத்தைப் பிடித்தது. பயந்து ஓடிபின் வாங்கினேன். சிரித்தபடியே இடைதுறை மன்னன் வெளியில் வந்தான். நான் பயந்தாலும், அவன் இடைதுறை மன்னன் என்பதைத் தெரிந்துகொண்டு, தலை குனிந்தபடி நின்றேன். அவனை மயக்கி அரண்மனைக்குள் புகுந்துவிடலாம் என்று எண்ணமிட்டேன். அப்போதும் கூட என்னை நானே காத்துக்கொள்ள முடியும் என்று நம்பினேன். அன்னையின் கட்டளையே அதுதானே? 'உன்னையும் காத்து பணியையும் நிறைவேற்று' என்றுதானே அன்னை சொன்னார்கள்.

"அதன்படி காரியத்தை நிறைவேற்றமுடியும் என்றுநம்பினேன். இப்படி நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, என்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் இடைதுறை மன்னன்.

"நீ குளித்துக்கொண்டிருக்கும் போதே நான் வந்துவிட்டேன்" என்றான்.

"அழகு ததும்பும் உன் பருவப் பொலிவை நான் அணு அணுவாய் ரசித்தேன்" என்றான். எனக்கு நெருஞ்சி முள்ளிலே புரள்வது போல் இருந்தது. மாற்றான் என் மேனியைக் கண்டான் என்பதையே என்னால் சிந்திக்க முடியவில்லை.

"இவ்வளவு அழகைத் தேக்கி வைத்துக் கொண்டிருக்கும் நீ யார்?" என்று கேட்டான். சுருக்கமாக "நாடோடி!" என்றேன். அந்த வார்த்தையைக் கேட்டதும் அவன் சத்தம் போட்டுச்சிரித்தான். "தாயில்லையா, தந்தையில்லையா?" என்றான். "யாருமில்லை" என்றேன் ஒருவார்த்தையில். "தடையில்லை" என்றான். அடி எடுத்து வைத்தான். அருகிலே வந்தான். நான் பயந்தேன். பின்வாங்கினேன். எட்டிப்பிடித்தான். கிட்ட இழுத்தான் "என்னோடு வா" என்றான். என் உடல் நடுங்கிற்று. "எங்கே?" என்றேன். "அரண்மனைக்கு" என்றான். என் மனம் மகிழ்ந்தது. ஆனாலும் பயம் நிறைந்தது. கையை மெதுவாக விடுவித்துக் கொண்டேன். அவன் பின்னாலே சென்றேன். ரதத்திலே ஏற்றினான், அரண்மனைக்குச் சென்றோம்.

அங்கே விலை உயர்ந்த சேலை ஒன்று தந்தான். அணிந்து கொண்டேன். நகைகள் கொடுத்தான், மறுத்துவிட்டேன். அரசாங்க அலுவல்களைக்கூட அவன் மறந்து விட்டான். நான் அலங்கரித்துக்கொள்ள வேண்டும்' என்பதிலேயே கருத்தாக இருந்தான். அவனை நெருங்கவிடாமல் நானே அலங்காரங்கள் செய்து கொண்டேன். அதுவரையில் நாங்கள் அரண்மனை அந்தரங்க அறையில் இருந்தோம். அடிக்கடி அங்கே

சேனை வீரர்களும் சேவகர்களும் வரப்போக இருந்தனர். அதனுல் அவன் என்னை "அந்தப் புரத்திற்கு வா'' என்ருன். அங்கே அழைத்துச் சென்ருன்.

பல நாட்டுப் பெண்களும், பல வகை அழகிகளும் குவிந்து கிடந்த அந்த இடத்தில் எனக்கென்று தனி அறை ஒதுக்கிஞன். பணிப் பெண்களை அழைத்தான். கேட்பதெல்லாம் கொடுங்கள் என்று உத்திரவிட்டான். அது வரை அது போன்ற அந்தப்புரங்களைக் கண்டறியாத எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அத்தனை பெண்களும் என்னை முறைத்துப் பார்த்தார்கள். புதிதாக ஒருத்தி வந்து விட்டாள் என்ற பொருமையில் பொருமிஞர்கள். எனக்கு மன்னரே பணி செய்வதைக் கண்டு கொதித்தார்கள். ஏன் ? நான் எதிலே குறைவு ? என்பது போல் ஒருத்தி அபிநயம்காட்டுவாள். ஆரம்பத்தில் என்னிடம் கூட மன்னர் இப்படித்தான் இருந்தார் என்று ஒருத்திஜாடையாகச்சொல்லுவாள். சோழ நாட்டில் நாம் காண முடியாத வகையெல்லாம் அங்கே அந்தப் பெண்களிடம் கண்டேன். வயதேறிய பட்டத்து ராணி இதையெல்லாம் சாதாரணமாகக் கருதிப் போய்க் கொண்டிருந்தாள்.

அந்திபட்ட அந்த நேரத்திலே என் அறையை விட்டு மன்னன் போவதாகக் காணேம். என்ன நடக்குமோ என்று பயந்து நான் நின்று கொண்டே இருந்தேன். படுக்கையிலே அமர்ந்தான். என் பக்கத்திலே வா என்ருன். எந்த வழியும் கிடையாமல் திகைத்தேன். என்ன செய்வதென்று புரியாமல் விழித்தேன். அவனே எழுந்து என் அருகில் வந்தான். என் கைகளைப் பிடித்து உட்காரவைத்தான். அப்போது எனக்குஒரு வழி தோன்றியது '' ஐயோ ! இதை அரிசங்கமன் கண்டால் கொன்று விடுவார்!" என்றேன். 'அரிசங்கமனு, அவனுக்கு நீ என்ன வேண்டும் ?' என்று ஆச்சரியத்துடன் கேட்டான். தயக்க மின்றி நான் அவருடைய காதலி என்றேன். "அவர் தங்களுடைய நெருங்கிய நண்பரல்லவா? என்ஞல் அவருக்கும் உங்களுக்கும் பகைமை வரக் கூடாது!'' என்றேன் "நீ இடைதுறை நாட்டுக்கு எப்படி வந்தாய் ?'' என்று அவர் கேட்டார். "இது தானே என் தாயகம். அடிக்கடி அரிசங்கமன் ஆள் அனுப்புவார். அவருடன் நான் போய் வருவேன் ''! என்று கூறினேன்.

'' எனக்கும் அவனுக்கும் உள்ள உறவு உனக்குத் தெரியுமா ?'' என்று அவன் கேட்டான். "ஓ ! நன்ருகத் தெரியும். சோழ சிம்மாசனத்தைக் கைப்பற்றுவதற்கு நீங்கள் திட்டமிடுகிறீர்கள்,'' என்றேன். அவன் திடுக்கிட்டான். நான் மேலும், '' அதற்கான வழி வகைகள் பலவற்றை நானே அரிசங்கமனுக்குக் கூறியிருக்கிறேன். இந்தத் திட்டத்தை உருவாக்கியவளே நான் தான் !'' என்றும் கூறினேன்.

அவன்மிகுந்தஆச்சரியப்பட்டான். பேரைக்கேட்டான். கமலினி என்றேன். உடனே அவன், "கமலினி! எல்லாவகையாலும் நீ எங்களுக்கு வேண்டியவளாகி விட்டாய். அரிசங்கமனுடைய காதலிதான் நீ என்ருலும் உன்னை விட்டுவிட எனக்கு விருப்பமில்லை'' என்ருன். நான் திடுக்கிட்டேன். "அரிசங்கமனுக்குத் தெரியாமலேயே நீ இந்த அந்தப்புரத்தில் இருந்து விடலாம். மற்றவற்றை நான் கவனித்துக்கொள்கிறேன் !'' என்ருன்.

'' இது சிநேகிதத் துரோகமல்லவா ? '' என்றேன். '' இல்லை, நீ அவனுக்கு வெறும் காதலிதானே உங்களுக்குத்தான் மணம் ஆகவில்லையே ! அதஞல் தவறில்லை'' என்று புதுவிளக்கம் கொடுத்தான்.

என்பதிலைக் கூட எதிர்பாராமல் என் கையைப் பிடித்து இழுத்துத் தன் னருகில் கொண்டு போஞன். நான் நடுங்கி, 'ஐயோ ! என்னை இப்போது விட்டு விடுங்கள். எல்லோரும் தூங்கட்டும்'' என்றேன். அவன் தாள முடியாத வெறியுணர்ச்சியில் இருந்தான். ஆனுலும் முதல் நாளிலேயே பலவந்தப் படுத்த விரும்பாதவன்போல்'சரி, இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவேன்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

நான் ஓரளவுக்கு மனம் தேறினேன், என்ருலும் சிறிது நேரத்தில் வந்து விடுவானோ என்ற பயம் இருந்தது ! அப்போது பணிப்பெண் ஒருத்தி, உள்ளே வந்தாள். மிகவும் களைத்திருப்பீர்கள்,இந்தப்பாலைசாப்பிடுங்கள் என்ருள். எனக்கு அவள் சொன்னது புரிந்தது. "களைப்பு ஒன்றும் இல்லை ; இன்னும் ஒன்றுமில்லை'' என்று நான் ஆத்திரமாக பளிச்சென்று கூறிவிட்டேன். என் தலை கலைந்திருந்ததையும், நான் நின்றநிலையையும் பார்த்து "எல்லாம்'' நடந்துவிட்டதாகவே அவள் கருதியிருக்கிருள்.

அப்போது அந்தப்புரத்தின் மற்ற பெண்கள், கதவு ஓரமாக ஒருவர் மேல் ஒருவராக விழுந்துகொண்டு என்னைப் பார்த்தார்கள்.

அவர்களில் ஒருத்தி என்னைப் பார்த்து "உம், அப்படி யொன்றும் அழகில்லை'' என்று சலித்துக் கொண்டாள்.

நான் கோபமாக "படாரெ''ன்று கதவைச் சாத்தினேன். அப்போது உள்ளே பணிப்பெண் நின்ருள். கூர்ந்து கவனித்தேன். அவள்கருப்புத்தான். ஆனுலும் தோற்றத்தில் என்னைப்போலவே இருந்தாள். உடற்கட்டு முழுக்க முழுக்க என்னைப் போலவே இருந்தது.அவளை அருகில் அழைத்து "எனக்கு ஒருஉதவி செய்வாயா?'' என்று கேட்டேன். என்ன தான் பணிப்பெண்ணுயிருந்தாலும் நான் கேட்ட உதவியைச் செய்ய அவள் மறுத்தாள். என் நிலையைச் சொல்லிக் கெஞ்சினேன். என் கெஞ்சுதலுக்கு அவள் இணங்கிஞள். என் கொள்கை என்னைக் காத்து, இன்னெருத்தியைப் பலியாக்கப் போகிறது என்று எண்ணிய போது எனக்குக் கண்ணீரே வந்து விட்டது. ஆனுலும் அவளுக்கு மன்னரோடு மகிழ்ந்திருக்கும் சபலமும் கொஞ்சம் இருந்தது என்பது எனக்குத் தெரியாது. முதலில் மறுத்த அவள் பிறகு அந்த நேரத்தை உற்சாகத்தோடு வரவேற்கத் தொடங்கிவிட்டாள்.

அந்த அறையிலிருந்த ஆடையாபரணங்களால் அவளை அலங்கரித்தேன். என்னுடைய ஆடைபோலவே அவள் ஆடையும் இருக்கும்படி

கண்ணதாசன்

பார்த்துக்கொண்டேன். உடனே எனக்கொரு எண்ணம் தோன்றிற்று. நிறைய மது வேண்டுமே என்று நினைத்தேன். அந்தப்பணிப் பெண்ணை ஆடையாபரணங்களுடன் வெளியிலனுப்பப்பயந்தேன், பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவளைக் கட்டிலுக்குக் கீழே படுக்கச்சொல்லிவிட்டு, நானே கதவைத் திறந்து, வேருேர் பணிப் பெண்ணைப்பார்த்து மதுக் கொண்டு வர உத்திரவிட்டேன். சிறிதுநேரத்தில் அவள் ஒருபெரிய கிண்ணத்துடனும் மதுக்குடத்துடனும் வந்தாள்.

அவளை உள்ளே வரவிடாமல் நானே அவற்றை வாங்கி உள்ளே வைத்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் அவரும் வந்துவிட்டார்.

அவர் இப்போது தன்னை ஒரு வாலிபர் போலச் செய்துகொண்டிருந்தார். அவரைப் புன்னகையோடு வரவேற்றேன். அதைச் சம்மதம் என்று அவர் முடிவுகட்டிக் கொண்டு மிக உற்சாகமாகக் கதவைத் தாளிட்டார். அவரைப் படுக்கையில் உட்காரச்சொன்னேன், உட்கார்ந்தார். பழம் கொடுத்தேன்; தின்ருர். மதுக் கொடுத்தேன்; குடித்தார். அந்தப்புரக் காதல் வர்ணனைகளை அடுக்கடுக்காகப்படித்தார். பக்கத்தில் வந்து "உட்கார், உட்கார்'' என்றுஉயிரை வாங்கிஞர். திட்டம் கெட்டுவிடக் கூடாதே என்பதற்காக அருகிலே போய் அமர்ந்தேன். திடீரென்று நான் எதிர்பாராத விதமாக என்னைக் கட்டிப் பிடித்துவிட்டார். '' விடுங்கள், விடுங்கள். சன்னலைச் சாத்தவேண்டும். விளக்கை அணைக்க வேண்டும்'' என்று கூவினேன். சரி, சீக்கிரம் என்று சொல்லி விடுவித்தார். அதற்குள் நிறைய மதுக்குடித்துப் போதையில் இருந்தார். நான் சன்னலை அடைத்து விளக்கை அணைத்தேன். வாவா என்று அவர் அவசரப்பட்டார். நான் அங்கு நின்றபடியே செருமினேன். ஐயோ ! பணிப் பெண்ணுக்கு ஜாடை வார்த்தை சொல்லிவைக்க மறந்துவிட்டேன்.

(தொடரும்)

பெரு மிதத்துடன் அறிவிக்கிறேம் !
வெகு விரைவில் வெளி வருகின்றன !
கண்ணதாசன் எழுதிய
பெரும் பயணம்
கவிஞன் (புதிய நாவல்)
கவிதைகள்
அருணேதயம்
நல்லண்ண முதலி சந்து—ராயப்பேட்டை
சென்னை 14

சிரிப்புத்தான் வருகுதையா!

'தினத்தந்தியை' படிக்கும் போதெல்லாம், 'சிரிப்புத்தான் வருகுதையா' என்ற நினைப்பும் கூடவே வரும். இப்படியும் ஒரு பத்திரிகையா? என்ற வியப்பும் சில நேரங்களில் ஏற்படும். 'கயிறு' திரிப்பதிலும் - தலைப்புகளில் கைவரிசை காட்டுவதிலும் சோரம் போனவளின் வாக்கு மூலத்திலிருந்து சேலை உரித்தவனின் சாட்சியம் வரை ஒன்று விடாமல் கொட்டைத் தலைப்புகளில் வெளியிட்டு பெருமைப் பட்டுக் கொள்ளும். சில 'திடீர்' புரட்டுகளைச் செய்வதில் அதற்கு அது தான் இணை: குறிப்பாக எவனாவது ஒரு மரத்தடி ஆசாமி, 'ஆகா! ராமனைப்பழித்தால் கொன்றுவிடுவேன்' என்று எங்காவது ஒரு இடத்தில் கூறினால் தினத்தந்திக்கு அது தான் நாலுகால மேட்டர். இதோ அவர்கர்ஜிக்கிறார், அதோ சட்டிச்சாமி சவால் விடுகிறார்! கத்தியைக் காட்டினார், கண்களை உருட்டினார்; இப்படியெல்லாம், இடத்தை நிறப்பி - அதோடு வயிற்றையும் நிறப்பிக் கொள்ளுகிறது! பயனா? பயனில்லையா? தேவையா? தேவையில்லாததா? அதைப் பற்றியெல்லாம் கவலையில்லை தந்திக்கு. நடிகர் மகாலிங்கம் நாகூர் ஆண்டவரைக் கும்பிட்டார்' இப்படி ஒரு தலைப்பு! என்ன அவசியமோ இதற்கு தெரியவில்லை, ஏதோ அவர் கும்பிட்டதால் உலகமே தலை கீழாக மாறி விட்டது போல நினைப்பு. பத்திரிகை செல்ல வேண்டியபாதை இதுவல்ல. இது போன்ற தந்திக்கே உரித்தான சில தலைப்புகள்,. நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது! ஆனால் அந்த சிரிப்பு 'ஒரு பயித்தியத்தைப் பார்த்தால்' ஏற்படுமே அதைப் போன்றது.

சகுந்தலாவின் தாலிகளவு!

புடவை திருடி அடகு வைத்தவன் பிடிபட்டான்!

நாட்டியம் தெரிந்த பெண்ணை கணவனால் அடிக்கமுடியுமா?

நடிகையின் ரவிக்கை!

பொடி மட்டை திருடிய எம். எல். ஏ!

என் வேலைக்காரி நல்லவள். இரவில் என் வீட்டிலே தங்குவாள் (கோர்ட்டில் வாலிபன்)

காலேஜ் மாணவிகளின் புடவை எங்கே?

ஆ! என் பிராண நாதா (கோர்ட்டில் பெண் புலம்பல்)

'நானிருக்க பயமேன்' இளம் பெண்ணிற்கு அனுமார் பக்தர் அபயம்.

சுப்புலட்சுமி 'விக்கி' 'விக்கி' அழுதாள்.

மாமியார் வீட்டிற்கு முறுக்கு வடை ஏன் கொடுத்தாய்? (கணவன் மனைவி தகராறு)

திருப்பதி ஏழுமலையானை வசந்த குமாரி கும்பிட்டாள்.

திருப்பதி கோயிலில் சினிமா நடிகர்!

தாடியின் பெருமை.

பாஞ்சாலியைக் கடத்திய பெருமாள்!

வாலறுந்த அனுமார்-புது வால் ஒட்டும்படி பக்தர்கள் முறையீடு!

சரஸ்வதியின் தாலியை அறுத்த கண்ணன்.

காதலன் மீது கிருஷ்ணவேணி வழக்கு:

அனந்த நாயகி சனிபகவானைக் கும்பிட்டாள்!

' கொஞ்சும் புறாவே ' பாடும் படி வாத்தியார் மாணவியைக் கேட்டார்!

நாகலட்சுமியை தூக்கிக் கொண்டு ஓடியவர் சடைபில்லையுடன் பிடி பட்டார்.

மலையம்மாளின் சேலைக்குள் பாம்பு!

தனபாக்கியம் என்னை செருப்பால் அடித்தாள்! (கோர்டில் வாலிபன் புகார்)

ரங்க நாயகி குளிக்கும் போது நகைகள் அபேஸ்

சரோஜா வழக்கில் பாதிரியார் சாட்சி!

இரட்டைப் பின்னல் சுகந்தி வழக்கு!

புடவையைக் கிழித்தவர் பிடிபட்டார்!

ரவிக்கையை கிழித்தவருக்கு தண்டனை.

விநாயகம் கழுதையா!

ஓடிப் போன கல்யாணி சென்னையில் அகப்பட்டாள்.

ஐயோ! என் மனைவியை வேறு ஆளுக்கு கல்யாணம் செய்கிறார்கள்-கோர்டில் கணவன் (புலம்பல்)

எப்படி? 'தினத்தந்தி'யின் 'அற்புதத்' தலைப்புகள்!

பர்மியத் தலைநகரிலே.........

10-ம் பக்கத் தொடர்ச்சி

துள்ளவன் என்றும் இறுதியாக, ஊசோ பர்மா மந்திரிமார்களைக் கொலை செய்யவும் தக்கின் னூவைக் கொலைசெய்யத் திட்டம் போட்டு கொலையாளிகளைச் சேகரித்து காரியங்களை நடத்தியதாகவும், கனம் கோர்ட்டாரவர்களின் தீர்ப்பே முடிவு என்றும் சொன்னார். பின்னர் நீதிபதி, இவ்வழக்கு சம்பந்தமான முடிவு (Judgement) டிசம்பர் 30 அன்று கூறப்படும் என்று சொன்னார்.

37வது நாள் விசாரணை 30-12-47 அன்று நடைபெற்றது. அகில உலகமும் எதிர்பார்த்து வந்த பர்மா மந்திரிமார்கள் கொலை வழக்கில் ஸ்பெஷல் கோர்ட்டார் இன்று தீர்ப்பளித்தார்கள்.

காலை 10 மணிக்கு ஸ்பெஷல் கோர்ட் தலைவர் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஊசோமின்ட் தமது விஸ்தாரமான 84 பக்கங் கொண்ட தீர்ப்பை வாசிக்கத் தொடங்கினார்.

' ஊசோ போட்ட திட்டப்படி மவுன்சோ தலைமையில் நேட்நீ, செய்ன்ஜீ, யான்ஜீ அவிங் நான்கு பேரும் மந்திரிமார்களைக் கொலை செய்துள்ளபடியால் பினல் கோடு 302 (1) பி. 37-வது செக்ஷதுபடி மரண தண்டனை விதிக்கிறேன்

ஊசோர்வுடன் கீன் மவுன்யீன், தூகா' மவுநீ, மொவுன்ஜீ ஆகிய 5 பேரும் சதியாலோசனை செய்து திட்டம் போட்டு நடத்தியதற்கு உடந்தையாக இருந்ததால், பினல் கோடு 302 (1) பி 109-வது செக்ஷன்படி இவர்கட்கும் மரண தண்டனை விதிக்கின்றேன்.

குற்றவாளிகள் அப்பில் செய்ய வேண்டுமென்றார் இன்றிலிருந்து 7 நாட்களுக்குள் அப்பீல் செய்து கொள்ளலாம். அப்ரூவர் பானூன் விடுதலை செய்யப்பட்டான்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தேதியிலிருந்து 41 நாட்களுக்குப் பிறகு ஸ்பெஷில் பெஞ்ச் நீதிபதிகள் முன்னிலையில் ஊசோவுடன் மற்ற எட்டுக் குற்றவாளிகளின் அப்பீல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 15 நாள் விசாரணை நடைபெற்று மார்ச் 9 அன்று அப்பீல் நீதிபதிகளால் தள்ளிவிடப்பட்டது. எப்ரல் 9 அன்று ஊசோவையும் மற்ற குற்றவாளிகளையும் தூக்கிலிடும்படி பர்மா சர்க்கார் உத்திரவிட்டனர். இதற்குள் ஊசோ, சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்வதாக மனுக் செய்துகொண்டது ஒப்புக் கொள்ளப்பட்டதால் மேற்படி தேதியில் குறிப்பிட்ட தூக்குததண்டனை ரத்து செய்யப்பட்டது. பின்னர் சுப்ரீம் கோர்ட்டார் 27-4-48 அன்று கீழக் கோர்ட்டார் தீர்ப்பை ஸ்திரப்படுத்தி ஊசோவுடன் மற்றவர்களின் அப்நீல் ரத்து செய்தனர். உயனே பர்மா சர்க்கார் மே 8ந் தேதி ஊசோவையும் இதர 8 குற்றவாளிகளையும் தூக்கிலிட உத்தரவிட்டனர்.

கனம் பர்மா ஜனாதிபதி கருணை காட்டுயதனால் தூகா, கீன்மவுன்யின், மவுநி ஆகிய மூவரின் மரண தண்டனை ஜென்ம தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

8-5-48 அன்று அதிகாலை! ஊசோ தூக்குமேடைக்கு கொண்டு வரப்பட்டார். தூக்கு மேடையிலிருந்து கொண்டு 'நான் போய் வருகிறேன்' என்று சொல்லி முடிந்ததும், சரியாக 5-33 மணிக்கு தூக்கிலிடப்பட்டார். பின்னர் மொவுன்ஜீ தூக்கிலிடப்பட்டான். சரியாக 6-30 மணிக்கு. மவின்சோ, தேட்நீ இருவரும் கொணவரப்பட்டு, ஏககாலத்தில் தூக்கிலிடப்பட்டனர். மாஜிஸ்ட்ரேட், டாக்டர் பிரேவிங்கர் பார்வையிட்ப்பின்னர், அவை பெட்டிறால் இரத்து அடக்கம் செய்யப்பட்டனர். இவை இன்ஜீன் ரெயிலில் நடைபெற்றன.

இரங்கூன் ஜெயிலில்: 5 மணிக்கு செப்ன்ஜீயும், யான்ஜீ அவுங்கும் தூக்கிலிடப்பட்டனர்.

பின்னர் மாஜிஸ்டிரேட்டும் டாக்டரும் வந்து பிரேதங்களைப் பரிசோதனையிட்டதும் பிரேதங்கஇ பெட்டிகளில் அடைத்து அடக்கம் செய்யப்பட்டன.

ஊசோ தூக்கிலிடப்படுவதற்கு முதல்நாள் எழுதிவைத்திருந்த கடிதமொன்றில் 'பி. ஒ. டியில் பிரென்கன்: குண்டுகள் முதலியன என் சொந்த அபிப்பிராயத்தில் திட்டமிட்டு எடுக்கப்பட்டன. அதற்குக் காரண மென்ன வெனில் நாட்டிலுள்ள மற்ற கட்சியினரிடம் ஆயுதம் தாங்கிய படைகளிருப்பதால், என்னுடைய கலூன் படையையும் பகப்படுத்துவதற்காக ஆயுதங்கள் சேகரித்தேன். இச்செயலில் ஈடுபட்ட பையன்கள் நான் சொல்லியபடியே எனக்கு பயந்து நடந்து வந்தமையால், அவர்கள் குற்றமற்றவர்கள்' என்று எழுதிமிருக்கக் காணப்பட்டது.

உலக சரித்திரத்தில் பாத்திராததும், பர்மா தேச அரசியலில் மிகவும் நெருக்கடியை உண்டாக்கின மான படுகொலைப்படலம் இத்துடன் முடிவுற்றது.

முற்றும்.

விற்பனையாகின்றன!

கண்ணதாசன் எழுதிய

தமிழர் திருமணமும் தாலியும்	0—6—0
கூட்டுக் குரல்	1—0—0
இலக்கியத்தில் காதல்	1—4—0
ஈழத்து ராணி	1—0—0

முன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்

அருணோதயம்

13. நல்லேண்ண முதலி சந்து — ராயப்பேட்டை

சென்னை - 14

இட்லரின் கடைசி நாட்கள் !

[அடால்ப் இட்லரின் நெருங்கிய நண்பரும், புகைப்படக் கலைஞரு மான **என்ரிச் ஆப்மன்** எழுதியுள்ள **"I shared Hitler's Secrets"** என்ற புத்தகத்திலிருந்து, இது வரை வெளி வராத, இட்லரைப் பற்றிய சுவையான ரகசியங்களை வாசகர் களுக்குத் தருகிறோம்.]

இட்லர் புதிய முறையில் தயாரிக் கப்பட்ட உடைகளை அணிவதே இல்லை. புதிய உடையில் தோன்றி ல் பொது மக்கள், அவனுடைய புதிய தோற்றத்தைக் கண்டு எள ளம் செய்வார்களோ என்ற பயம் அவனுக்கு ! புதிய உடைகளை அவ சியமாக அணிய வேண்டுமானல், முதலில் ரகசியமாக அணிந்து, என் னைப் புகைப் படம் எடுக்கச் சொல்லு வான். அந்தப் படம் இட்லருக்குத் திருப்தியளித்தால் தான் புதிய உடையில் பொதுமக்களிடம் காட்சி யளிப்பான்,

1925-ல் ஒரு பொதுக் கூட்டத்தில் இட்லர் பேசிக் கொண்டிருந்த பொழுது சில புகைப் படங்கள் எடுத் தேன். அதை இட்லர் பர்ர்த்தான். கையை நீட்டுவதும், தலையை ஆட்டுவ தும் கண்களைஉருட்டி விழிப்பதுமான சில ஆபாசமானபடங்கள் அவனுக்கு அதிருப்தியளித்தன. பொது மக் களும் இப்படித்தானே நினைத்திருப் பார்கள் என்று எண்ணினன். பின் னல் மேடைகளில் பேசும் பொழுது அவைகளைக் கவனத்துடன் தவிர்த் தான். அதனுல் தான்அவன்உலகப் பிரசித்தி அடைய முடிந்தது.

1933ல், இட்லர் பதவி யேற்றதும், வழக்கமாக அவன் அணியும் பவேரி யன் தோலாடைகளை ஒதுக்கி விட் டான்! அம்மாதிரி உடைகளில், பல முறைஎன்னல் எடுக்கப் பட்ட அவ னுடையபடங்கள் தேச முழுவதும் பரவியிருந்தது. அந்தப் படங்கள், நாட்டிலே இல்லாமல் ஒழித்து விடும் படிஎனக்குக் கட்டளையிட்டான்.

இட்லர் அணிந்த பவேரிய தோலா டைகள் என்பது அரைக் கால் நிஜா ரும், சாக்ஸ், பூட்சும்அணிவதுதான்.



இதனல் முழங்கால்கள் வெளியே தெரியும். இதைப் பார்த்து பொது மக்கள் எளனம் செய்வார்களோ என்ற பயம் இட்லருக்கு. அரை குறையான ஆடைகள் அணிந்திருக் கும் பொழுதோ, குளிக்கும் பொழு தோ இட்லரை புகைப்படம் எடுக்கக் கூடாதென்பது அவனுடைய கண் டிப்பான உத்தரவு. மாபெரும் சர் வாதிரி காரிகளாய் விளங்கிய பல ருடைய வாழ்க்கையிலிருந்து, பொது மக்களின் எளனத்திற்கும் புகழ் மங்கிப் போனதற்கும், ஆான பலசம்பவங்களை, அடிக்கடி எடுத்துச் சொல்வான் இட்லர்.

" பெர்லினர் இல்லஸ்ட்ரேட் " **(Berliner Illustrierte)** என்ற பத் திரிகையின்முகப்பட்டையிலேதேசத் தலைவர் எபர்ட் **(Ebert)**யுத்த மந்திரி நோஸ்கி **(Noske)** ஆகியோர் நீரோ டையில் குளித்துக் கொண்டிருக்கும் படம் வெளியாயிற்று. அதனல் அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட இழுக்கும், மரியாதைக் குறைவும் அளவிட முடியாதது.

"முசோலினியும் இதே மாதிரி உடம்பை வெளியில் காட்டிக்கொள் கிறர். அவர் குளிக்தம் பொழுது எடுக்கப்படும் படங்களை பார்க்கும் போது எனக்கே கோபம் வருகிறது. ஒரு பெரிய சர்வாதிகாரி -ராஜதந் திரி இம் மாதிரி நடந்து கொள்ளக் கூடாது. நெப்போலியன் போன்ற வருடைய இம்மாதிரிப் படங்களை நம்மிடம் யாராவது கொடுத்தால் நமது மனம் என்ன பாடு படும் ? நான் பொது மக்கள் கூடு மிடங் களில் குளிப்பதில்லை. திறந்த உடம்பை அவர்களிடம் காட்டினல் நமது கம்பீரத்தை அவர்கள் மறந்து விடுவார்கள், " என்று இட் லர் கூறுவான்.

இட்லரின் வைத்தியரான டாக்டர் மோரெல் **(Dr. Morell)** "இட்லரை 'எக்ஸ்ரே' எடுப்பதற்கு அவரை இணங்கச் செய்வது மிகவும் கடி னம்" என்றுஎன்னிடம் சொன்னர். இட்லரைப் பரிசோதனை செய்ய மோரெல் விரும்பினல், இட்லர் தன் வேலைக்காரனைக் கூட வெளி யில் அனுப்பி விடுவது வழக்கம்.

இட்லர் தடை செய்த என்னு டைய படங்களில், அவனும், எவா பிரானுடைய நாயான பர்லியும் இருக்கும் படமும் ஒன்று.

"இந்தப் படம் எவ்வளவு நன் ருக இருந்தாலும், ஆனந்தம் அளிப்பதானலும், ஒரு சர்வாதி காரி, ஒரு நாயுடன் சேர்ந்து படம் பிடித்து வெளிபிட்டிருப்பதை அனு மதிக்க முடியாது" என்று இட்லர் சொல்லுவான். அவனுடைய கட் டளைக்குப் பணிந்து அந்தப் படங் களை நான் அழித்து விட்டேன்.

தனக்கு யாராவது விஷத்தைக் கொடுத்து விடுவார்கள் என்று இட் லர் பயப்படுவான். ஆட்சியைக் கைப் பற்று முன்பு, பல வீடுகளிலிருந்து பெண்கள் அவனுக்கு உணவு அனுப்பு வார்கள். அதில் யாராவது விஷம் கலந்திருந்தால் என்னவது? ஒன்றையும் ருசி பார்க்கமாட்டான். ஒரு முறை இட்லருக்காக வந்த உணவை, அவனுடைய மோட்டார் டிரைவர் செராக் சாப்பிட்டதும் மிக வும் ஆபத்துக் குள்ளாகி விட்டான். அன்றையிலிருந்து இட்லரின் சந் தேகம் வலுப் பெற்று விட்டது.

ஒரு முறை துருக்கி தூது கோஷ்டி யொன்று இட்லருக்கு மிட்டாய் வகைகள், இனிப்புப் பண்டங்கள், சாக்லெட், பழங்கள், தேன் கலந்த பண்டங்கள் முதலிய வற்றை அன் பளிப்பு செய்தது. அவற்றைப் பார்த்து இட்லரே ஆச்சரியப்பட்டான்.

ஆனல் அதில் ஒன்றைக் கூட அவன் ருசி பார்க்க வில்லை. 'சான்சலரி' தோட்டத்தில் **(Chanecllery garden)** புதைத்து விடும்படி கட்டளையிட் டான். வேறு யாருக்காவது கொடுக்கலாமல்லவா ? "இதெல் லாம் வீண் தானே" என்று நான் கேட்டுக் கொண்டேன். " நான் வேண்டா மென்று வெறுப்பதை என் நண்பர்களும், மக்களும் தொட அனுமதியேன் " என்று இட்லர் பதிலளித்து விட்டான்.

பெரிய நகரங்களில் தியேட்டர் களுக்குச் செல்ல இட்லர் விரும்பு வான். ஒரு முறை **டிரெஸ்டன் (Dresden)** நகரத்திலுள்ள ஒபேரா தியேட்டருக்குச் சென்றோம். அங்கி ருந்த வேலையாள் ஒரு பெரிய பெட் டியை எங்களுக்குக் காட்டினன். அந்தப் பெட்டியின் மீது தங்கக் கிரீடம் பதிக்கப் பட்டிருந்தது.

" இதற்கு என்ன ர்த்தம் ?" என்று கேட்டான் இட்லர்.

"சாக்சோனியின் அரசர் **ஆகஸ்ட் (August)** இதில் அடங்கியிருக்கிறர்" என்றன்வேலையாள் கைகட்டிவாய் புதைத்து நின்ற படி..

"பட்டமிழந்த மன்னனுடைய பெட்டியிலே நான் போய் அமரு வேன் என்று நீ நினைக்கிறயா ? இல்லை ! " என்று சொல்லி விட்டு வேகமாக வெளியே நடந்தான் இட்லர்.

சில சமயம் அவனுடைய போக்கு விநோதமாக இருக்கும். ஒரு நாள் 'தங்கம் தயார் செய்யத் தெரியும்' என்று **சில்கன் (Schilgen)** என்ற ஒருவன் வந்திருப்பதாக **ஹிம்லர் (Himmler)** தெரிவித்தான்.

" அப்படியா ! அவனைத் தனி யாக சிறையில் வைத்து விடு. தங் கம் செய்வதற்கு வேண்டிய சாத னங்கள் எது வேண்டு மென்று கேட்கிறனே அதை யெல்லாம் கொடு. ஏனென்றல் தங்கம் செய் வதற்குத் தகுந்த சாதனங்கள் இல்லை என்று சொல்லி, தப்பிச் செல்ல முயல்வான். தங்கம் தயார் செய்ததும் அவனை விடுதலை செய்து விடுவோம்" என்று பதில ளித்தான் இட்லர்.

அதன் படி **சில்கன்** சிறைக்குச் சென்றன்; ஆனல் பாவம், அங் கேயே இருந்து விட்டான் அவன்.

இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனி பின் வாங்கும் சந்தர்ப் பம். இட்லர் தனது அதிகாரங் களில் பல வற்றை தனது உதவியா ளரான **மார்டின் போர்மன் (Martin Bormann)** என்பனிடம் ஒப்ப டைத்தான். அவன் விடுக்கும் உத் தரவுகளை இட்லர் கோழைத்தன மாகவும் அங்கீகரித்தான்.

1944-ல் ஒரு நாள் ஆஸ்ட்ரியாவில் இட்லரின் சொந்தத் தூதுவரும், எனது மருமகனுமான **பால்தூர் வான்சிராச் (Baldur van Schirach)** என்பவன் தெரிவித்தசெய்தியைஇட் லரிடம் தெரிவித்தேன்.

அதாவது :- "யுத்தம் ஆரம்பித்த ஒரு சில வாரங்களில், வியன்ன நகரில் விமான எதிர்ப்பு வேலைகள் பூர்த்தியாகி விட்டன. ஆனல் அவைகள் இயங்கினல் மக்களுக்கு அச்சம் ஏற்படும் என்ற காரணத் தால் அவற்றை உபயோகிக்க வேண் டாமென்று போர்மன் தெரிவித் திருப்பதாக சிராச் சொல்கிறன்."

இட்லர் இதைக் கவனமாகக் கேட்டான், "உன் மாப்பிள்ளையிடம் சொல்லி இதை ஒரு வழியாகத் தீர்த்துக் கொள்ளுங்கள் ஆப்மன் ! யுத்தத்தில் வெற்றி பெற வேண்டு மானல் போர்மன் எனக்கு அவசி யம் வேண்டும். போர்மன் இரக்க மற்றவன் ; கொடுங்கோலன் என் பது உண்மை தான். அவன் ஒரு மாடு தான். ஆனல் ஒருவர் பின் ஒருவராக பலர் என்னுடைய கட் டளைக்குக் கீழ்ப்படிய தவறி விட்ட னர். ஆனல் போர்மன் அப்படி யில்லை, " என்று கூச்சலிட்டான் இட்லர்.

தமிழாக்கம் : க. நா.

அவனுடைய குரலிலே கடுமை யும், வேகமும் தொனித்தது. யாரா யிருந்தாலும் எனக்குக் கவலை யில்லை! ஒன்று மட்டும் அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். யார் போர்மனுக்கு விரோதிகளோ, அவர்கள் இந்தத் தேசத்திற்கும் விரோதிகளாவர். அவர்கள் பதினபிரக் கணக்கில் நிறைந்திருந்தாலும், அவர்களைச் சுட்டு, ஒழித்து விடுவேன். எழு கோடிமக்கள் அழிவுப் பாதைக்கு இழுக்கப் படுவதை விட, அவர்களை அழிவுப் பாதைக்கு இழுக்கும் சில ஆயிரம் முட்டாள்கள் ஒழிக்கப்படு வது எவ்வளவோ மேல் ! " என்று உரத்துக் கூறினன்.

இட்லர் இம்மாதிரி தொனியில் இதற்கு முன்பு என்னிடம் பேசி யதே இல்லை. கனல் கக்கும் அவ னுடைய கண்களைப் பார்க்கவே எனக்குப் பயமாக இருந்தது.

(அடுத்த இதழில் முற்றும்.)

நன்றி

பொங்கல் விழாவினை முன்னிட்டு வாழ்த்துக்கள் அனுப்பி என்னை மகிழ் வித்த நண்பர்களுக்கும் தோழர்களுக்கும் என் அன்பு வாழ்த்துக்களை உரித்தாக்கி, நன்றி கூறிக் கொள்கிறேன்.

கண்ணதாசன்

பர்மியத் தலைநகரில் பயங்கரக் கொலை !

8

24-11-47 அன்று 16-வது நாள் விசாரணை ஆரம்பமாயிற்று. ஊலாச்சோ, ஊழியைங், சான்சிங், போசோத்தவுன், ஊமவுங் மவுங், ஊலாபே, ஊதெய்ன் ஒன் முதலியோர் விசாரிக்கப்பட்டனர். ஊஅவுன்செய்ன், ஊமியைங் இருவரும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். 25-11-47 அன்று நடந்த 17-வது நாள் விசாரணையின்போது ஊஅவுன் சான்பே, மவுன்செய்ன், போசெய்ன் மவுன்தான் முதலியோர் விசாரிக்கப்பட்டனர். 18-வது நாள் விசாரணையின்போது மவுன்தவன் செய்ன் குறுக்கு விசாரணை செய்யப்பட்டான். போடுன்லாஅவுங், மவுன் ஒன், ஊடின்போ ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். 19-ம் நாளன்று ஊடின்மவுங், அவுன்சோ செய்ன், அப்ரூவர் பானூன் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். 20-ம் நாள் அன்று ஊபாயே, மிஸ்டர் ஐப் ஊசோயின், ஊபாகலே, டாக்டர் கபூர், கொசெய்ன்யே என்ற கொல்லன் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். 21-வது நாளன்று மிஸ்டர் பெல், கொடின்னூன், மிஸ்டர் பூக், ஊமெய்ன், முகமத், எஸ். ஐ. பி. சோகின், ப. நாராயணன் தேசாய், மவுன் யேப்பே, மவுன் சூ, எஸ். ஐ. பி. மவன்னூ ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். 22-வது நாளன்று மிஸ்டர் பூக், கோகோஜீ, உலாப்பே ஆகியோர் விசாரிக்கப்பட்டனர்.

23வது நாள் விசாரணை அன்று லாட்டின் விசாரிக்கப்பட்டார். பின்னர் நீதிபதி, ஊசோவை 'வாக்குமூலம் தரச்சம்மதமா' எனக் கேட்டார். ஊசோ, மவுன்சோ, தேட்நீ, யான்ஜீ அவுங் ஆகியோர் வாக்குமூலத்தை எழுதிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். செய்ன்ஜீ, தூகா, கின்மவுன் யீன், மவுநீ, ஆகியோர் தாங்கள் தெரிந்தவற்றை ஒன்று விடாமல் சொல்லிவிடுவதாகச் சொன்னார்கள். மொவுங்ஜீ தனக்காக ஊசான்லின் எழுதிக் கொடுப்பாரென்றும் சொன்னார்.

24வது நாள் விசாரணையின் போது குற்றவாளி மவுன்சோ விசாரிக்கப்பட்டான். பின்னர் 3வது குற்றவாளி தேட்நீ விசாரிக்கப்பட்டான். 25வது நாள் விசாரணையின் போது 4வது குற்றவாளி செய்ன்ஜீயும், 5வது குற்றவாளி யான்ஜீ அவுங்கும் விசாரிக்கப்பட்டனர். பின்னர் யான்ஜீ அவுங் வாக்குமூலம் தந்தான். போலீஸ் கோர்ட்டில் தான் கொடுத்த வாக்குமூலம் தன்னுடைய சொந்த அபிப்ராயமல்ல என்றும், போலீசார் சொல்லிக் கொடுத்தபடி சொன்னதாகவும் சொன்னான்.

26வது நாளன்று 6வது குற்றவாளி தூகா, 7வது குற்றவாளி கின்மவுன்யீன், 8வது குற்றவாளி மொவுன்ஜீ ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். 27வது நாளன்று செய்ன் மவுன், ஊபாகலே, அப்ரூவர் பானூன் ஆகியோர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். 28வது நாளன்று 9வது குற்றவாளி மவுநீ சத்தியம் செய்து வாக்குமூலம் தந்தான். பின்னர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டான். 29வது நாளன்றுமவுன்நீமீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டான். பின்னர் கர்டிஸ் பென்னட் ஊசோவைப் பற்றிப் பேசினார். ஊசோ சாட்சிக் கூண்டிற்குக் கொண்டுவரப்பட்டார். ஊசோ வாக்குமூலம் தந்தார். தான் மந்திரிமார்களைச் சுட்டுக் கொல்லத் திட்டம் தீட்டியதில்லை என்றும், அதற்காக தனது மோட்டார்களை கொடுத்ததில்லை என்றும், எந்த விதமான சதியாலோசனையும் தன் பார்ட்டியில் நடந்ததில்லை என்றும், பானூனும் சோயனவ்வும் தன்னிடம் வந்து மந்திரிமார்களைக் கொலை செய்யவேண்டுமென்று சொன்னதாகவும், தான் மறுத்ததாகவும் அதன் பின்னர் பானூன், 'அண்ணா நீங்கள் ஒத்துழைக்காது போனால் சோயரானவ்வுடன் நான் காரியத்தை முடித்துவிடுகிறேன்' என்று சொல்லிச் சென்றதாகவும் சொன்னார். இறுதியாக, மந்திரிமார்கள் கொலை சம்பந்தமாக தான் கைதியாகியிருக்கிறது உண்மையல்ல என்றும் தன்பேரில் எந்தவிதக் குற்றமெடுத்தாலும் அது உண்மையல்ல என்றும் சொன்னார்.

30வது நாளன்று ஊசோ குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். தான் மந்திரி பதவியை ராஜினாமா செய்தவுடன் சோயா தன் வீட்டிற்கு வந்ததாகவும், அவுங்சானைக் கொலை செய்யவேண்டுமென்ற ஆலோசனையைக் கூறியதாகவும் சொன்னார். கலூன் படை பற்றிய பல விவரங்களையும் ஊசோ கொடுத்தார்.

31வது நாளன்று ஊசோ மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். சாட்சிக் கூண்டில் ஏறி, நீதிபதிகளுக்கு வணக்கஞ் செலுத்தி சத்தியஞ் செய்து வாக்குமூலம் கொடுத்தார். பானூனும்சோயானவ்வும் கையொப்பமிட்ட ஓர் நீண்ட தாக்கீதைக் கொண்டுவந்து கொடுத்ததாகவும், அதுதான் கைது செய்யப்படும்போது தன்னுடைய படிக்கும் அறையில் இருந்ததாகவும் அதில் தானும் கையெழுத்திட்டதாகவும் சொன்னார். மொவுன்ஜீ தனது வீட்டிலிருந்து போனது தனக்குத் தெரியாதென்றும், மேஜர் யங் என்பவரிடமிருந்து டாமிகன் கிடைத்தது உண்மையல்லவென்றும், சில ஆயுதங்கள் ஒரு நண்பரால் அன்பளிப்பு செய்யப்பட்டது என்றும், சொன்னார். மேலும் தன்மீது பழியைப் போட்டுவிட்டால் எல்லோரும் விடுதலையடைந்து விடலாமென்று எண்ணுகிறார்கள் என்றும், அவர்களுக்குத் தான் துப்பாக்கி சுடப்பழகிக் கொடுத்ததாகச் சொல்வது உண்மையன்று என்றும் கூறினார். நீதிபதி ஊசோவின் வாக்குமூலத்தை வாசிக்கும்போது, ஊசோ எழுந்து, தான் படித்துக் காண்பிப்பதாகப் பலமுறை வாதாடினார். நீதிபதி மறுக்கவே, ஊசோ தானே மனப்பாடமாக படித்துக்கொள்வதாகவும் நீதிபதி கருணை காட்டவேண்டுமென்றும் சொல்லவும், நீதிபதி ஊசோவிடம் கொடுத்துவிட்டார்.

32வது நாளன்று ஊசோவின் மனைவி டோதான்கின் விசாரிக்கப்பட்டார். அதன் பின்னர் டாக்டர் பாமோ, தக்கின் பாசெய்ன், ஊதுலின், ஊபாலின், சோசெய்ன் முதலியோர் விசாரணை செய்யப்பட்டனர்.

33வது நாளன்று எதிர்தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். ஊப்போசான், மவுன்தான் மவுன், ஹந்தாவாடிபத்திரிகை ஊட்டுன்பே ஊச்சியாயான், மாநீ என்ற பர்மியப்பெண், கொட்டுன், ஊபா, தக்கின்டுன் ஓவ், தக்கின்கா, போமோசெய், செய்ன்லா அவுங், ஊலாட்டோ முதலியோர் விசாரணை செய்யப்பட்டனர்.

34வது நாளன்று ஊத்தெய்ன் ஓவ் விசாரிக்கப்பட்டார். அடுத்து சி. ஐ. டி. சூப்ரண்டெண்ட் ஊலாட்டோ விசாரிக்கப்பட்டார். அவர் விசாரணையில், தனக்குக்கிடைத்த தஸ்தாவேஜ் விபரங்களைத் தெரிவித்தார். பென்னட், இத்தஸ்தாவேஜ் சம்பந்தமாக ஊசோவை மறுபடியும் விசாரிக்க வேண்டுமென்று சொல்ல, ஊசோ சாட்சிக் கூண்டில் ஏறி சத்யப் பிரமாணம் செய்தார். அட்வகேட் ஜெனரல் ஊசோவை குறுக்கு விசாரணை செய்தார்.

பின்னர் கர்டிஸ் பென்னட் தெரிவித்ததாவது : "இவ் வழக்கு சம்பந்தமாக ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். ஊசோ, அதிகாரத்தைக் கைப்பற்ற இந்தக் கொலையை நடத்தினார் என்பது மதியீனம். அவருக்கு எதிராக சாட்சி சொன்னவர்கள் சிலபேர் போலீசாரால் அடிபட முடியாமல் தவறுதலான சாட்சியங்கள் தந்திருக்கின்றார்கள். அரசியல் விஷயங்களுக்காக இம்மாதிரி கொலைகள் நடைபெறுது. ஊசோ திட்டம் போட்டு ஆயுதங்களுடன் ஜீப் காரை அனுப்பியிருந்தால் கொலை நடந்த பிற்பாடு வீட்டிலேயே இருக்கமாட்டார்கள். என்னுடைய அபிப்பிராயத்தில் ஊசோ நிரபராதி என்று நினைக்கிறேன். மற்றவர்களின் சாட்சியங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஊசோ தூக்கிலிடப்படமாட்டாரென்று நினைக்கிறேன். ஊசோ நிரபராதி" என்று சொல்லி முடித்தார்.

35வது நாளன்று ஊசோவின் லாயர் கர்டிஸ் பென்னட் முதல் நாளன்றே லண்டனுக்கு ஆகாய மார்க்கமாகச் சென்றுவிட்டதாகத் தெரிந்தது. ஊஒன்மியங், ஊஒன்கின், ஊடுன் சைன் முதலியோர் விசாரிக்கப்பட்டனர். இத்துடன் இரு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவுற்றபடியால் மவுன்சோ, தேட்நீ, யான்ஜீ அவுங், மொவுன்ஜீ முதலியோர்களுக்கு வாதாடிய லாயர் ஊசான்லின் இக் குற்றவாளிகள் இவ்வழக்கில் எப்படி சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்தார். அவர் சொன்னதாவது 'எங்கள் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் குற்றவாளிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் தேட்நீ, மொவுன்ஜீ போலீசாரிடம் அடிபட்டு 'பலவந்தமாக அவர்கள் சொல்லியபடி வாக்குமூலம் கொடுத்ததாகத் தெரிகிறது. எனவே அந்த வாக்குமூலத்தை உண்மையானதென்று எடுத்துக்கொள்ள முடியாது. 20ந் தேதி ஊசோ வீட்டின் பின்பக்க ஏரியில் ஆயுதங்கள் கிடைத்ததென்பதற்கு யாதொரு ஆதாரலிஸ்டும் கிடையாது. குற்றவாளிகளை அடையாளம் காண்பித்த மவுன்தான் மவுன்தவுன்செய், மவுன்ஒன், ஊடின்போ முதலியோர்கள் அடையாளம் தெரிந்திருந்தும் ஒருவரிடமும் ஒன்றும் சொல்லாது சிலநாள் சென்று போலீஸ் விசாரணையின் போதுதான் சொல்லியுள்ளார்கள். முக்கியமான ஒரு விஷயத்தைப் பல நாட்கள் சொல்லாமலிருந்தோமென்பது நம்பிக்கையற்ற வார்த்தை. மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று முரணாகத் தெரிவதால் கனம் நீதிபதியவர்கள் முழு உண்மையும் தெரிந்து முடிவுக்கு வரவேண்டும்.

இத்துடன் இவரது ஆர்க்யுமெண்ட் முடிந்தவுடன், நீதிபதி, லாயர்களில்லாத குற்றவாளிகளைப் பார்த்து நீங்கள் தெரிவிக்க வேண்டியவைகளைத் தாராளமாகத் தெரிவிக்கலாம் என்று சொன்னதும், கொலையாளிகளில் ஒருவனான செய்ன்ஜீ எழுந்து ஆத்திரத்துடன் பேசினான், தனது தந்தை ஊசோவிற்குக் கடமைப் பட்டவரென்றும், அதனால் ஊசோவின் கட்சியில் தான் சேர்ந்ததாகவும், சூலை 18 அன்று இரவு மந்திரிமார்களைக் கொலை செய்ய வேண்டுமென்று ஊசோ தன்னிடம் உத்திரவிட்டதாகவும் அதை மறுக்க நினைத்தபொழுது ஊசோவின் ரிவால்வார் தன்நெஞ்சில் இருப்பது மாதிரி தெரிந்ததாகவும், மறுநாள் மந்திரி சபை சென்றதாகவும், 'சுடு சுடு' என்ற உத்திரவு கேட்டு சுட்டதாகவும் சொன்னான். அடுத்துத் தூகா இக்கொலையில் தான் சம்பந்தப்பட்டது தன் மனமாரவல்ல என்றும் ஊசோ சொன்னபடி நடந்ததாகவும் சொன்னான். இப்போது உண்மையைச் சொல்கிறதாகவும் இதன் முடிவு கோர்ட்டாரைப் பொறுத்திருக்கிறது என்றும் சொன்னான்.

அதன்பின்னர் கின்மவுன்யீன் இவ்வழக்கு சம்பந்தமான முழு விபரங்களையும் போலீஸ் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதாகவும் கோர்ட்டாரின் முடிவு போதும் என்றும் சொன்னான். அடுத்து மவுன்நீ தான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்ல என்றும், படுகொலை சம்பந்தமாகத் தனக்கு எதுவும் தெரியாதென்றும், ஒப்புயர்வற்ற தலைவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்று தெரிந்த பிறகுதான் தனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லத்தீர்மானித்து உண்மையைச் சொல்லியுள்ளதாகவும் குறிப்பிட்டான.

36வது நாள் விசாரணையன்று, கவர்மெண்ட் அட்வகேட் ஜெனரல் ஊட்டுன் பியூ, குற்றவாளிகள் எப்படி இவ்வழக்கில் கலந்துள்ளார்களென்பதை சுமார் நாலரை மணி நேரம் விளக்கமாக எடுத்துரைத்தார். 'நம் நாட்டுக்கே அபக்கியாதியை உண்டுபண்ணி உலக சரித்திரத்திலேயே இல்லாத இக்காரியங்களைச் செய்ததற்கு ஊசோதான் பொறுப்பாளி என்று என் முழு மனதுடன் இக்கோர்ட்டார் முன் தெரிவிக்கிறேன் என்று குறிப்பிட்டார். மொவுன்ஜீ, ஊசோவின் கையாட்களில் மிகவும் நெருங்கியவன் என்றும், அவனும் சதியாலோசனையில் பங்கெடுத்

(8-ம் பக்கம் பார்க்க)



ஏ. பி. கேசவன் திருத்துறைப்பூண்டி

தென்றலாரே ! சமணகாவியம் என்று கூறப்படும் சீவக சிந்தாமணியில் குறுந்தொகை, பட்டினப் பாலை, நற்றிணை, குறள் முதலிய பண்டைத் தமிழ் நூல்களின் கருத்துக்கள் கையாளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறதே உண்மையா?

ஆம் ! திருத்தக்கதேவர் ஆக்கிய சிந்தாமணியில் தமிழ்ப் பெரு நூல்களில் உள்ள சில அறிய கருத்துக்களும், தொடர்களும் ஆங்காங்கே கையாளப் பட்டிருக்கிறது- எடுத்துக் காட்டாக,

'வில்லக விரலிற் பொருந்தி' என்ற குறுந் தொகைத் தொடர் (370)

வீட்டிடந்தோறும் வில்லகவிரல் போற் பொருந்திநின்று' என சிந்தாமணியில் (2110) வரியிலும்,

ஞாயிறனையன் தோழி !
நெருஞ்சியனையவென் பெரும்
பணைத் தோளே'

என்ற குறுந் தொகைக் கருத்து (315)

'நீள் சுடர் நெறியை நோக்கும்
நிறையிதழ் நெருஞ்சிப்பூப்போல்
என்று (461) வரியிலும்.

மாமலையணைந்த கொண்மூப் போலவும் தாய்முலை தழுவிய குழ்வி போலவும் என்ற (95-96) பட்டினப்பாலை அடிகள்

தாய் முலை தழுவிய குழவி போலவும், மாமலை தழுவிய மஞ்சு போலவும் என்று சிந்தாமணியின் (100) வரியிலும்.

'கண்ணீர் அருவியாக அழுமே தோழியவர் பழமுதிர் குன்றே' என்ற நற்றிணை (88)-வது அடிகள்.

கோளுமுவை யன்னற்குக் குன்றமும் நின்றழுதனவே, என்று சிந்தாமணியின் 1226 வரியிலும்.

தொழு தகை யுள்ளும் படையொடுங்கும் ; ஒன்னர் அழுத கண்ணீரும் அனைத்து என்ற குறள்.

தொழுத தங்கையினுள்ளும்
துறு முடியகத்தும் சோர
அழுத கண்ணீரினுள்ளம்
அணிகலத் தகத்தும் ஆய்ந்து
என்று (1891) வரிகளிலும்,

முறையே சங்க நூல்களின் கருத்து, பதினென் கீழ்கணக்கு நூல்கள் முதலியவற்றின் கருத்துக்கள் கையாளப்பட்டு இருக்கிறது.

◎

வி. சோமநாதன். புதூர்

தென்றலாரே! காவிரிக்குக் கரை கட்டியவன் என்றும், இமயத்தில் புலியைப் பொறித்தவன் என்றும், காடாயிருந்த தொண்டைநாட்டின் பெரும் பகுதியை நாடாக்கியவன் என்றும் தென்னாட்டு வரலாற்றில் புகழப்படும் மன்னன் யார் ? இவனைப்பாடிய புலவர்கள் யார் ?

இத்தகைய சிறப்பினைப் பெற்றவன் இரண்டாம் கரிகாலன். இவன் வாழ்ந்த காலம் கி.பி. 50 முதல் 96 வரை. கடியலூர் உருத்திரங் கண்ணனார் இவனைப் பட்டினப் பாலையாலும், முடத்தாமக் கண்ணியார் பொருநருற்றுப் படையிலும் பாடினர். பாடிய புலவர்களுக்கு கரிகாலன் பதினாயிரம் பொன் பரிசளித்ததாகக் கலிங்கத்துப் பரணியில் காணப்படுகிறது.

◎

டி. கே. நாதன் ஆரணி

பெண்கள் பூவை என்று அழைக்கப்படுவது ஏன் ? காரணம் உண்டா ?

மென்மையும், அழகும் வாய்ந்த பூவிற்கு நிகராக பெண்களைக் கருதினர் தமிழர். இதனால் பெண்கள் பூவை எனப்பட்டனர். பூவிற்குப்பல பருவங்கள் உண்டு, அரும்பு, முதற் பருவம், முகை ; அடுத்த பருவம், போது விருந்து மலராகும். அதைப்போலவே பெண்களுக்கும் பேதை-பெதும்மை, மங்கை, மடந்தை முதலிய பருவங்கள் உண்டு. இல்வாழ்க்கைக்கு பக்குவப்படும் போது பெண்மை மணக்கிறது, பூவை என்று பெண்கள் அழைக்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

◎

தொல்காப்பியன், சென்னை-20.

"பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர் ;
பாரி ஒருவனும் அல்லன் ;
மாரியும் உண்டு ஈண்டு உலகு
புரப்பதுவே"

தென்றலாரே! இதன் பொருள் என்ன ; யார்பாடியது ?

தமிழ்ப்புலவரெல்லாம் பாரி, பாரி, என்று ஒருவனையே மாறி மாறி புகழ்கின்றனரே' இம் மா நிலத்தைக் காப்பவன் பாரி ஒருவன் தானா ஏன் மழைஇல்லையோ? என்று பாரியைப் பழிப்பார்போலப் புகழ்ந்து பாடியவர் செந்தமிழ்ப் புலவர் கபிலர்.

◎

சிவராமன் செங்கல்பட்டு

தென்றலோய்! 'புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி' எது,

வைகை ஆறு! புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி வையை என்ற பொய்யாக் குலக் கொடி' என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்,

◎

கே. விசுவநாதன் குன்றத்தூர்

"போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி நாவாய் குழற நடுங்குறுவாய்--தீவாய்" இந்த வரிகள் எந்த நூலில் வருகின்றன விட்டுப்போன அடிகளுடன்— பொருள் தருக !

"தீவாய்--அரவகற்றும் என் போல ஆர்கலியே மாதை இரவ கற்றி வந்தாய் கொல் இன்று" இது நளவெண்பாவின் பாடல். காதலியை கானகத்தில், அதுவும் காரிருளில் கைவிட்டுப் போன நளன் கலங்கிப் புலம்புவது இது. எனனைப்போல கருங்கடலே, நீயும் உன் காதலியை நள்ளிரவில் பிரிந்தாயோ என்று நளனின் சோகம் பொங்குகிறது, இந்த வரிகளில்.

◎

சின்னதம்பி கொழும்பு

ஆவடி காங்கிரஸ். இலங்கைத் தமிழருக்கு மாபெரும் துரோகம் செய்து விட்டது என்கிறேன்.

ஆமாம் ! அந்த மாநாட்டில் இலங்கை தமிழர் பிரச்சனை பற்றிய தீர்மானமே இல்லை ! அதற்காகத் தானே சொல்கிறீர்கள்.

◎

மெய்யன்பன் பீளமேடு

ஐயா ! தென்றலாரே ! பொதுவாக நேரு எப்படிப்பட்டவர்.

சுருக்கமாக அவர் ஒரு உபதேசியார். அதாவது ஊருக்கு மட்டும் உபதேசிப்பவர். பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டு மென்றால் 'பிர்லாமாளிகையின் மர்மம்' ! என்ற நூல் துணை புரியும் என்கிறேன்.

◎

டி. வி. நீலகண்டன், மதுரை.

ஐயா, சில தமிழ் நூல்களில், 'வேளிர்' என்ற சொல்காணப் படுகிறதே--அப்படி என்றால் என்ன பொருள்.

தமிழகத்தில் கடைச்சங்க காலத்திற்கு முன் பிருந்தே முடியுரிமை இல்லாத பல சிற்றரசர்கள் இருந்தார்கள். இவர்களில் சிலர் மூவேந்தருக்கு உட்பட்டும்-பலர் உட்படாமலும் வாழ்ந்தனர் இந்த சிற்றரசர்களுக்குத்தான் 'வேளிர்' என்று பெயர்.

◎

ஓ. சேகரன், வண்ணை.

தென்றலாரே ! 'கிருமி கண்ட சோழன்' என்பது யார்? எக்காலத்தைச் சேர்ந்தவன் விளக்குக?

கிருமி கண்ட சோழன் என்று குறிப்பிடப்படுவதுவிக்ரம சோழனின் மகனை இரண்டாம் குலோத்துங்கன். இவன் காலம் கி. பி. (1133-2150) எனக் கொள்க !

◎

கே, பத்மநாபன், தஞ்சாவூர்.

தென்றலாரே இதற்கு பதில் கூறும் 'குழலினது யாழ் இனிது என்பதாம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் இந்த குறட் கருத்து ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றில் நயமாகக் கையாளப் பட்டிருக்கிறது.
அந்த நூல் எது ?

"அளியத்தாமே சிறுபசுங்கிளியே குழலும்யாழும் அமிழ்தும் குழைத்தநின் மழலைக் கிளவிக்கு வருந்தின" என்று சிலப்பதிகார வரிகளில் வருகிறது. மேற் கூறிய குறள் கருத்தை உள்ளத்திற் கொண்டு இளங்கோவடிகள் தம் நூலின் கண் புகுத்தியுள்ளார்.

காங்கிரசின் கதி என்ன ?

நேரு ஒருவர் தான் காங்கிரஸ் கட்சியின் தலைவராம் ! தேபர் சொல்லுகிறார். நன்றி கூறும் அந்த நல்ல மனிதராம் தேபருக்கு வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. பாவம் ! காங்கிரஸ் இயக்கத்தை நேரு 'சகாப்த்தத்தோடு' முடித்து விட எண்ணுகிறாரா ? அல்லது நேரு 'என்றும் சிரஞ்சிவி, என்று கருதுகிறாரா ? தெரிய வில்லை நேரு ஒருவர்தான் தலைவர் என்றால்-நேருவுக்குப் பின் காங்கிரசின் கதி என்ன? புதிய தலைவரை உண்டாக்க வேண்டும். அப்படி உண்டாக்கு வதற்குக் கூட ஆள் கிடையாது காங்கிரசில் ! தலைவனில்லாத கட்சி உருப்படுமா ?

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 3

ஈற்றடி: "கொண்டுவந்து போட்டுக் கொளுத்து"

குறிப்பு ; நேரிசை வெண்பாக்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு தேதி 19-2-55

முகவரி :
நீதிபதி 'சகி'
'தென்றல்'
2-127, மௌண்ட்ரோடு, சென்னை-6.

நாங்கள் கேட்கிறோம் நீங்கள் சொல்லுங்கள்

கேள்வி 'ஒன்றுக்கு' வந்துள்ளபதில்களில், சரியான பதிலும், எழுதியோர் பெயர், முகவரிகளும் அடுத்த இதழில் வெளிவரும்.

[ஆசிரியர்]

வெண்பாப் போட்டி

1. பூக்காமற் போகுமோ பூ !

இருளுலகில் வாடுகின்ற என்தமிழர் மீளக்
குறள்முழக்கம் வீதிதொறும் கொண்டால் - ஒரு
நொடியில்
தூக்கம் தொலையாதோ ? தொன்மைத் தமிழகம்
பூக்காமற் போகுமோ பூ !

— ச. கிருஷ்ணமூர்த்தி, அரக்கோணம்

★

சிங்கத் திருவிடத்தில் சிந்தியசெந் நீரெல்லாம்
தங்கத் தமிழ்ச் செடிக்குத் தண்ணீராம்—வெங்கதிரின்
வேக்காட்டால் வெந்திடுமோ ? வேகாத அச் செடியில்
பூக்காமற் போகுமோ பூ.

— "கோவல் வாணன்", சேத்துபட்டு

★

கண்பார்வை பட்டால் கலங்கு முலகமெனின்
அன்பா லுலகாளும் ஆரமுதே -- பெண்பாவாய் !
நீக்காமு கத்திரையை நீக்கிப் போட்டுவிடின்
பூக்காமற் போகுமோ பூ.

— மா. குமரேசன். மதுரை

★

அருமைத் திராவிடம் தன் னாட்சியுரு வாகிப்
பெருமைதான் மீண்டும் பெறுதோ ? -- சிறுமதியோர்
தாக்காமல் தாக்கினும் தாங்க தடந் தோளுண்டே !
பூக்காமற் போகுமோ பூ.

— நா. புகழேந்தி, தூத்துக்குடி

★

காதம் பலகடந்து காதலி, யிங் கேங்குகிறேன் ;
மாதம்போ னாலும் மறவாதே !-காதலெனும்
பூக்காட்டிற் காலத்தாற் பூவிலகின் மீண்டு மங்கு
பூக்காமற் போகுமோ பூ.

— மார்க்கண்டன், தூத்துக்குடி

★

வீங்கு புகழ்தமிழில் வேரூன்றும் திண்மைமனம்
தேங்கு, பகுத்தறிவுத் தென்றலால்-பூங்காவில்
பூக்கும் தருணத்தில் புல்லர் தடுத்திடினும்
பூக்காமற் போகுமோ பூ

— "சிந்தனை", திருக்காட்டுப்பள்ளி

★

உறவைத் துறந்தோம் உயிர் துறந்தோம் கூண்டுப்
பறவை எனச்சிறையும் பட்டோம் -- நெறிதவறி
நோக்காமற் போகின்றோம் நோய்க்குப் பரிசாகப்
பூக்காமற் போகுமோ பூ !

— சினி, பார்ப்பாரப்பட்டி

★

புல்லறிவு மண்ணதிலே புத்தறிவு முல்லை நட்டு
நல்கருத்து நல்நீரை நல்கிவிட்டு — தொல்,களைகள்
போக்கி வளர்த்தால் புதுமையெனும் லட்சியந்தான்
பூக்காமற் போகுமோ பூ.

— ந. ப. சு. மணியன், சவலையபட்டி

★

தூக்கம் எனநினைத்தார் தொன்மை திராவிடர்க்கு
வீக்கம் மிகு மண்டை வீணர்கள் ! -- ஊக்கமதைப்
போக்காமற் பொன்விலங்கு பூணுமல் நாம்முயன்றாற்
பூக்காமற் போகுமோ பூ !

— "தமிழ்வேள்", காவேரிப்பட்டினம்

புலி, கயலும், வில்லுமாய்ப் பூண்டாண்ட நாட்டார்
கலிசேர் பிறிதைக் களைந்து — நலிவொழித்து
நீக்குமற ஒற்றுமையாய் நேரின் தமிழரும்பு
பூக்காமற் போகுமோ பூ.

—வித்துவான். ச சுந்தரேசன், கோனூர்

★

என்முன்னோர் ஆண்டுவந்த இன்பத் திராவிடத்தைப்
புன்மதியார் இக்காலில் பூட்டியுள்ளார்—என்றாலும்
நீக்கம் அடைந்திடுமே ! நெற்சாலில் வைத்தாலும்
பூக்காமற் போகுமோ பூ.

— இரா. நிறையழகன், பண்ணுருட்டி

★

கொள்கை உரன்தூவிக் கோதில் பிரசார
வெள்ளம் பெருக்க விழித்தெழு உம்-தெள்ளுணர்வைப்
போக்காமற் போற்றின், புகைந்த தமிழினமும்
பூக்காமற் போகுமோ பூ !

— க. வீரகத்தி, கொழும்பு 5

★

தெக்கணத்தில் நின்றிலங்கும் சீர்கொள் திராவிடமும்
தக்கதொரு காலத்தே தான்மலரும் — எக்கணத்தில்
பூக்குமொரு மொக்கென்றே யாரறிவார் ? பொக்
கெனவே
பூக்காமற் போகுமோ பூ.

— இல. காளியப்பன், மதுரை

★

நேற்றுக் கனவினிலே நெஞ்சம் புகுந்திட்ட
ஆற்றுப் புனல்அழகீ ! ஆரமுதே ! — சாற்றிடுவாய் !
நோக்குங்கால் நீநோக்காய் ! நோவடைவே னானாலும்
பூக்காமற் போகுமா பூ !

— எஸ். எஸ். வி. இராமன், குருசாமிபாளையம்

★

கீழ்வான் சிவக்கும் ; கிளர்வண்ண நல்லரும்பைத்
தாழ்திறக்கக் காற்று வரும் ; தண்காதல்-யாழ்மீட்டி
வாய்க்காத மின்வண்டு வந்துலவும்; முல்லை தனிற்
பூக்காமற் போகுமோ பூ !

— ம. இலனியன். பாளையங்கோட்டை

★

அருக்கனெழு முன்னர் அரும்புநிலை யாகி
இருக்கின்ற பூம்பொழிலி லேற்ற — சுரும்பார்ந்து
மாக்காதல் கொண்டு தேன் மாந்தவரும் வண்டென்று
பூக்காமற் போகுமோ பூ

— க. வீ. வரதன், சென்னை-23.

★

சாக்குருவி மூடச் சமுதாயம் சாற்றுகிற
தீக்கொள்கை யத்தனையும் தீயிலிட்டு, -- நோக்கமுயர்
வாக்கிடவே வந்த அறிஞ(ர்)மனச் சோலையிலே
பூக்காமற் போகுமோ பூ

— கண்டராதித்தன், விழுப்புரம்

★

பாக்குக் குலைதொங்கும் தேக்கு மலைவனத்தைக்
காக்கும் கருந்தும்பி காதலுற்று - ஏக்கமுடன்
யாத்தும் நல்லிசை ஈர்த்து மதுகொடுக்கப்
பூக்காமற் போகுமோ பூ

— ஆர். ஆர். என். ஜார்ஜ், சின்னாளப்பட்டி,

★

நாட்டுப் பிரிவினையாம் நல்லரும்பை மாய்க்கவந்தார் ;
போட்டியிட்டு மொட்டாய்-பொலியுதின்று ! -
வாட்டமதை
நோக்காமல் வன்னெஞ்சும் நுண்ணறிவும்
பூக்காமற் போகுமோ பூ [வைத்துழைத்தால்

— நக்கீரன், சென்னை.

தென்றல் திரை

பிப்ரவரி 15 முதல் !
எங்கும் கிடைக்கும் !
இதுவரை
நீங்கள் சந்திக்காத புத்தம்புதிய பகுதிகள்!
கண்ணதாசன் எழுதும்
?
விலை அணா நான்கு

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14